294

வருட சந்தா ரூ. 3

# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 5 |
| | மார்கசிர்ஷ மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (13—12—32.) | நெ 5 |

15

| நெ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸத்யநாராயண விரத கதை. | 129 |
| 2. | மணிமஞ்ஜரி. (ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்.) | 135 |
| 3. | ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். | 139 |
| 4. | ஓர் மறுப்பு. | 142 |
| 5. | விசேஷதினங்கள். | 144 |
| 6. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) | 145 |
| 7. | சங்கர லீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்.) | 153 |
| 8. | காடக உபநிஷத். | 155 |
| | ...ண்டாள ஸம்பர்க்கம். | 157 |
| | ...ண சந்திரிகை. (ஸ்ரீமான் எம். ராமராவ்.) | 159 |

...ரியர்
...க்கனத் ரங்கநாதாசாரியார்.

N32-5.5
208700

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீஸத்யநாராயண விரத கதை.

### மூன்றாவது அத்யாயம்.

(முன்தொடர்ச்சி.)

ஸ்காந்த புராணம் ரேவாகண்டத்தில் சொல்லப்படுவதாவது:—

45. அரசனுடைய ஆக்ஞையைக்கேட்டு அப்படியே அந்த வியாபாரிகளை சிறையிலிருந்து வெளியே விட்டு விலங்குகளைக் கழற்றி அரசனின் எதிரில் அழைத்துவந்து அந்த ராஜசேவகர்கள் வணக்கமாய் இவ்வாறு அறிவித்துக்கொண்டனர். 46. அரசனே! அந்த இரண்டு வியாபாரிகளை இங்கு அழைத்துவந்திருக்கிறோம். சிறையிலிருந்து விடுவித்து விலங்குகளை கழற்றிவிட்டோம் என்றனர். பிறகு அந்த வியாபாரிகள் சந்திரகேதுராஜனை நமஸ்கரித்தனர். 47. அவர்கள் தங்களுடைய பூர்வ விருத்தாந்தத்தை எண்ணி ஸத்யநாராயணரின் கோபத்தால் இன்னமும் என்ன துக்கம் நேரப்போகிறதோவென்று பயந்து தளதளர்த்துப்போய் ஒன்றும் பேசாமல் நின்றனர். அவர்களைப்பார்த்து அரசன் அன்புடன் இவ்வாறு பேசினான். 48. உங்களுக்கு தெய்வ ஸங்கல்பத்தால் இந்த பெரும் துக்கம் நேர்ந்தது. இனிமேல் உங்களுக்கு பயமில்லை என்று சொல்லி விலங்குகளை எல்லாம் எடுத்து ஜெயிலிலிருந்த தோஷம் நீங்க அதன் பிராயச்சித்தமாக க்ஷௌரம் முதலிய காரியங்களைச் செய்துவைத்தான். 49. பிறகு அரசன் அவர்களுக்கு வஸ்திரம், அலங்காரம் முதலியவைகளைக் கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்தி மரியாதை செய்து வெகுவாய்ப் பேசி அவர்களை திருப்திபடுத்தினான்.

இ08700

50. அவர்கள் எற்கனவே கொண்டுவந்திருந்த பணத்தைவிட இரண்டு மடங்காய் அவர்களுக்கு திரவியத்தைத்தந்து ஸாதுவே! உன் வீட்டிற்கு போய்வா என்று அரசன்சொன்னான். 51. அரசனை அந்த வியாபாரி நமஸ்கரித்துவிட்டு உங்கள் அருளால் நாம் போய்வருகிறோமென்று சொல்லிப் போயினர்.

---

## நான்காவது அத்யாயம்.

ஸூதர் சொல்வதாவது:— பிறகு அந்த ஸாது மாப்பிள்ளையுடன் ஊருக்குப்போக பிராம்மணாளைக்கொண்டு புண்யாஹவாசன பூர்வகமாய் யாத்ராஸங்கல்பம் செய்துகொண்டு பிராம்மணாளுக்கு யாத்ராதானம் செய்துவிட்டு ஊருக்கு தன் கப்பலிலேறிப்போக வீட்டிலிருந்து புறப்பட்டான். 2. அவன் சிறிது தூரம் நடந்து சென்றபொழுது அவனுக்கு இனியாவது நற்புத்தி உண்டாயிருக்கிறதாவென்பதை பரீக்ஷிக்க பகவான் ஸத்யநாராயணர் ஓர் ஸன்னியாஸி உருவத்துடன் எதிரில் வந்து இந்த உங்கள் கப்பலில் என்ன இருக்கிறதென்று கேட்டார். 3. அவர்களிருவர்களும் கர்வங்கொண்டவர்களாய் வேடிக்கைச்செய்து சிரித்துக்கொண்டு ஹே ஸன்யாஸியே! நீர் எதற்காக இதைக் கேட்கிறீர். கப்பலுக்குள் முத்திரைப்போட்டு வைத்திருப்பதை உடைத்து எதைக் கொண்டுபோக நினைக்கிறீர். 4-5. இங்கு அப்படிப்பட்ட வஸ்து ஒன்றுமில்லை. என் கப்பலில் சாமானியமான இலைகள், கொடிகள் முதலியவைகள்தான் இருக்கின்றன; என்று அந்த வியாபாரி சொன்னான். அந்த கடுமையான மொழியைக்கேட்டு ஸன்யாஸியார் நீ சொன்னபடியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு வேகமாய் அந்த ஸாதுவிடமிருந்து விலகி சிறிது தூரத்தில் கடற்கரையோரத்தில் போய் உட்கார்ந்தார். 6. ஸன்யாஸியார் போனவுடன் ஸாது தன் நித்ய கர்மங்களை முடித்தெழுந்து கப்பலில் போய் பார்க்க மகா ஆச்சரியமாயிருந்தது. 7. கப்பலிலிருந்த திரவியமெல்லாம் இலை, கொடி முதலியவைகளாகவே மாறிப்போயிருந்தன. அதைப் பார்த்து ஹிருதயம் பிளந்துபோய் மூர்ச்சையாய் விழுந்தான். சிறிது நேரங்கழித்து பிரக்ஞைவர மகா சிந்தையடைந்தான். 8. அப்பொழுது மாப்பிள்ளை செட்டி இவ்வாறு பேசினான். எதற்காக துக்கப்படுகிறீர். ஸந்யாஸியார் இப்படி சாபம் கொடுத்துவிட்டார். 9. அதனால்தான் இப்படி ஆகிவிட்டது. அவர் அனுக்ரஹம் செய்தால் மீண்டும் அது மாறிவிடும். அவர் எதையும் செய்ய சக்தர். இதில் சந்தேகமில்லை. ஆகையால் நாம் அவருடைய காலில்போய்



விழுவோம் அதனால் நாம் கோருவது நிறைவேறும். 10. என்றிவ்வாறு மாப்பிள்ளையின் வார்த்தையைக்கேட்டு அந்த வியாபாரி ஸன்னியாஸியாரின் சமீபத்திற்குச் சென்றான். அவரை தரிசித்து பக்தியுடன் நமஸ்கரித்து ஆதரவாய் இவ்வார்த்தையாடினான். ஸ்வாமி! நான் தங்களிடம் பேசின குற்றத்தைமன்னிக்கவேண்டும். மன்னிக்கவேண்டுமென்று திருப்பித்திருப்பிச் சொல்லி நமஸ்காரம் செய்து கண்ணீர் சொரிந்து சங்கடப்பட்டான்; 12 அவன் இப்படிச் சொல்லி அழுவதைக் கண்டு ஸன்னியாஸியார் அழாதே. என் வார்த்தையைக் கேள். அடே! என் பூஜையைச் செய்யாமல் அலக்ஷியம் செய்தாய். 13. ஹே துர்புத்தி பிடித்தவனே! ஆகவே என் ஆக்ஞையால்தான் உனக்கு அடிக்கடி இப்படி துக்கம் நேரிடுகிறதென்றார். பகவானுடைய அந்த வார்த்தையைக்கேட்டு அந்த ஸன்யாஸி ஸாக்ஷாத் ஸத்யநாராயணர் என்றுதெரிந்துகொண்டு அவரை துதிக்க ஆரம்பித்தான். 14. ஸாது சொல்வதாவது: ப்ரபுவே! உம்முடைய மாயையால் பிரம்மாதி தேவர்களெல்லாம் மயங்கிப்போகிறார்கள். உம்முடைய குணங்களையும் ரூபங்களையும் சரியாய் அறிவதில்லை. இது மிகவும் ஆச்சரியமே. இப்படியிருக்க 15. நானோ முழுமூடன். போதாக்குறைக்கு உங்கள் மாயையும் சேர்ந்தது. ஆகவே நான் தங்களை எப்படி அறிவேன். பகவன் என்னிடம் அனுக்ரஹம் செய்யவேண்டும். என்னுடைய விபவத்திற்குத் தகுந்தபடி தங்களை பூஜிக்கிறேன் 16. எனக்கு முன்போல் திரவியத்தைத்தந்தருளவேண்டும். நான் தங்களை சரணமடைந்திருக்கிறேன். என்றிவ்வாறு பக்தியுடன் அந்த ஸாது பிரார்த்திக்க அந்த வார்த்தையைக்கேட்டு ஸ்ரீஹரி சந்தோஷமடைந்தார். 17. உன் இஷ்டப்படியே ஆகட்டுமென்று அவனுக்கு வரனைத்தந்து பகவான் அங்கேயே அந்தர்தானமடைந்தார். வியாபாரி கப்பலில் வந்துபார்க்கவும் இலை கொடிகள் முதலியவை திரவியங்களாய்மாறி கப்பல் நிறைய இருப்பதைப்பார்த்து சந்தோஷமடைந்தான். 18 ஸத்யநாராயணருடைய கருணையால் என் அபீஷ்டம் நிறைவேறியது; என்று சொல்லி அவனைச்சேர்ந்தவர்களுடன்கூடி விதிப்படி ஸத்யநாராயணரின் பூஜையைச் செய்தான். 19 ஸத்யநாராயணரின் ப்ரஸாதத்தால் மிக்க சந்தோஷத்தை அடைந்தான். பிரயாணத்திற்கு கப்பல் தயார்செய்து அவனுடைய ஊருக்கு புறப்பட்டான். 20. கப்பல் வெகு தூரம் செல்ல ஸாது தன் ஊர் வந்ததைப்பார்த்து விட்டு ரத்னஸாரபுரி அதோவந்துவிட்டது, பார்! என்று மாப்பிள்ளையிடம் சொன்னான். கப்பலை தன் ஊர் பக்கத்தில் நிறுத்தி தன் பணத்திற்கு காவலாயிருந்தவனை ஊருக்குள் அனுப்பினான். 21. தூதன் ஊரு

க்குள்போய் ஸாதுவின் பாரியாளிடம் சென்று அவளை வணங்கி கை கூப்பி அவளுக்கு பிரியமான வார்த்தையாடினன். 22. இந்நகரத்தின் சமீபத்தில் உங்கள் புருஷனான ஸாது அவருடைய மாப்பிள்ளையுடனும் உறமுறையார்களுடனும் அநேக சொத்துக்களுடனும் வந்திருக்கிறார் என்றான். 23. காவலாளியின் வாயால் இந்த வார்த்தையைக் கேட்டு அந்த அம்மாள் சந்தோஷமடைந்தாள். உடனே ஸத்யநாராயணனுடைய பூஜையைச் செய்தாள். பிறகு மகளைப்பார்த்துச் சொன்னாள். 24-28. நான் ஸாதுவைப் பார்க்கப்போகிறேன். நீயும் சீக்கிரம் வா என்றாள். தாய் சொன்ன வார்த்தையைக்கேட்டு மகளும் உடனே ஸத்யநாராயண வ்ரதத்தை செய்து முடித்துவிட்டு தடபுடலாய் அவருடைய ப்ரஸாதமாகிய ஹவிஸ்ஸை சாப்பிடாமல் கணவனைப் பார்க்க ஆவலாய்ப் புறப்பட்டுப்போனாள். அதனால் ஸத்யதேவர் கோபமடைந்து அவளுடைய கணவனையும் அவன் ஏறிவந்த கப்பலையும் அங்கிருந்த திரவியங்களுடன் அந்த ஜலத்தில் மூழ்கவைத்தார். பெண்ணான கலாவதி தன் பர்த்தாமட்டில் காணாமலிருப்பதைப்பார்த்து மிக்க துக்கமடைந்து அழுதுகொண்டு பூமியில் மூர்ச்சையாய் விழுந்தாள். கப்பலும் அவ்வாறு மூழ்கிப்போய் பெண்ணும் மிகவும் சங்கடப்படுவதைப் பார்த்து ஸாது மனதில் திகிலடைந்து இதென்ன ஆச்சரியமோவென்று யோசித்தான். அப்படியே கப்பலோட்டிகளும்கூட யோசித்தனர். 29. பிறகு தாயான லீலாவதி தன் பெண்ணைப்பார்த்து மனம் நொந்தாள். மகா துக்கத்தால் ப்ரலாபம் செய்தாள். பர்த்தாவைப்பார்த்து சொன்னாள். 30. இப்போது கப்பலுடன்கூட என் மாப்பிள்ளை எப்படி மறைந்தாரோ தெரியவில்லையே. எந்த தெய்வத்தை அலக்ஷியம் செய்ததால் என் மாப்பிள்ளை கொண்டுபோகப்பட்டிருக்கிறாரோ? கப்பலும் மறைந்துவிட்டதே! 31. ஸத்யநாராயணனுடைய மாகாத்மியத்தை அறிய யாரால்தான் முடியும், என்று சொல்லி சொந்த ஜனங்களுடன் பிரலாபம் செய்தாள். 32-34. லீலாவதி தன் பெண்ணான கலாவதியை இருபுஜங்களாலும் தழுவிக்கொண்டு மகா ப்ரலாபம் செய்தாள். பிறகு கலாவதி தன் கணவன் இறந்ததற்காக மகா துக்கமடைந்து கணவனுடைய பாதுகையை எடுத்துக்கொண்டு அதனுடன் உடன்கட்டை ஏற நிச்சயித்தாள். பெண் உடன்கட்டை ஏறி மறிக்கப்போவதைப் பார்த்து ஸாது தன் பாரியையுடன் மகா துக்கத்தால் பரிதவித்துப்போய் தர்மபுத்தியுள்ள அந்த ஸாது இவ்வாறு யோஜித்தான். ஸத்யநாராயணனால் என் மாப்பிள்ளைக்கொண்டுபோகப்பட்டிருக்கிறான். அவருடைய மாயை



யால் நான் மயங்கியிருக்கிறேன். 35-37. என் ஐசுவரியத்துக்குத் தகுந்தபடி ஸத்யநாராயணனுடைய பூஜையைச் செய்கிறேன்; என்று எல்லோரையுமழைத்துச்சொல்லி தான் அபேக்ஷித்திருப்பதையுமறிவித்து பூமியில் தண்டம்போல் விழுந்து பகவான் ஸத்யநாராயணரை அடுத்தடுத்து நமஸ்காரம் செய்தான். வருந்துகிறவர்களை பரிபாலிக்கும் ப்ரபுவான ஸத்யநாராயணன் அதனால் மகிழ்ந்து, பக்தர்களிடம் வாத்ஸல்யம்கொண்ட அந்த பகவான் கருணையுடன் அவனைப்பார்த்து அசரீர வாக்காய்ச் சொன்னார். என்னுடைய ப்ரஸாதத்தை சாப்பிடாமல் உன் பெண் தன் பர்த்தாவைப் பார்க்கப்போனாள். 38-40. ஆதலால் அவளுடைய பதி கண்ணிற்படாமல்போனான். இது ஸத்யம். மறுபடியும் அவள் வீட்டிற்குப்போய் என் பிரஸாதத்தை சாப்பிட்டுவிட்டு இங்கு வந்தால் பர்த்தா அவளிடம் வந்து சேருவான். ஸாதுவே! இதில் சந்தேகமில்லை. என்றிவ்வாறு ஆகாசவாணி சொன்னதை அப்பெண் கேட்டுவிட்டு விரைவாய் தன் வீட்டிற்கு ஓடிப்போய் ஸத்யநாரயணருடைய ப்ரஸாதத்தை உட்கொண்டாள். பிறகு அவள் ஸமுத்திரக் கரைக்கு வந்துசேர அவளுடைய பர்த்தா அவனுடைய ஜனங்களுடனிருப்பதைக் கண்டாள். 41. பிறகு பெண்ணான கலாவதி தன் தந்தையைப்பார்த்துச் சொன்னாள். இப்போதே வீட்டிற்குப்போய் ஸத்யநாராயண விரதத்தைச் செய். என் ஆலஸ்யம் செய்கிறாய். 42. பெண்ணின் வார்த்தையைக்கேட்டு அந்த வைசியன் ஸந்தோஷமடைந்தான். விதியில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸத்யதேவனின் பூஜையைச் செய்தான். 43. பந்து ஜனங்களுடனும் திரவியத்துடனும் வீட்டிற்குப் போய் பிரதி பௌர்ணமியிலும் ஸங்கிராந்தியிலும் ஸத்யநாராயணனின் பூஜையைச் செய்தான். 44. அவன் அதனால் இஹலோகத்தில் ஸௌகத்யத அனுபவித்துவிட்டு கடைசியில் ஸத்யநாராயணனுடைய லோகமாகிய வைகுண்டத்தை அடைந்தான்.

## ஐந்தாவது அத்யாயம்.

ஸூதர் சொல்வதாவது:— மற்றொரு கதையைச் சொல்லுகிறேன். ரிஷிகளே கேளுங்கள். 1. துங்கத்வஜனென்று ஓர் அரசன் இருந்தான். அவன் பிரஜைகளை பரிபாலிப்பதில் ஈடுபட்டிருந்தான். 2-3. அவன் ஸத்யநாராயணின் ப்ரஸாதத்தை சாப்பிடாமற் போனதால் மகாதுக்கமடைந்தான். ஒருஸமயம் அவன் வனத்திற்கு சென்று பலவகை மிருகங்களைக்கொன்று ஓர் ஆலமரத்தினடிக்கு வந்துசேற அங்கு ஸத்யநாராயணனுடைய பூஜைநடந்து கொண்டிருப்பதைக் கண்டான். அங்கு பக்தி

யுடன் கோபாலகர்கள் அவர்களின் உறமுறையார்களுடன் சந்தோஷமாய் ஸத்யநாராயண பூஜையை செய்து கொண்டிருந்தனர். 4-5. அவன் அரசனென்ற கர்வத்தால் ஸத்யநாராயணரின் பூஜைநடந்த விடத்திற்கு போய் நமஸ்கரிக்கவில்லை. ஆயினும் கோபாலகர்களெல்லோரும் சேர்ந்து அரசனிடம் போய் அவனுடைய எதிரில் பகவானுடைய ப்ரஸாதத்தை வைத்துவிட்டு அவர்களிருந்தவிடம் வந்து இஷ்டப்படி பகவத் ப்ரஸாதத்தை போஜனம் செய்தனர். அந்த பிரஸாதத்தை அரசன் சாப்பிடாமல் அதை பரித்யாகம் செய்தான். அதனால் அவன் கஷ்டமடைந்தான் 6. அவனுடைய நூறுகுமாரர்களும் மாண்டனர். அவனுடைய தனதான்யாதிகள் எல்லாமே நஷ்டமடைந்தன. அதைக்கண்டு அரசன் பச்சாத்தாபமடைந்து பகவான் ஸத்யநாராயணரால்தான் இப்படி எனக்கு நேரிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன் 7. ஆகவே அவருக்கு எங்கு பூஜைநடக்கிறதோ அங்கு நான் போகிறேன். என்று மனதில் நிச்சயித்து கோபாலகர்களிருந்த விடம் சென்றான். 8. பிறகு கோபாலகர்களுடன் சேர்ந்து பக்தி சிரத்தையுடன் வித்யுக்தமாக ஸத்யநாராயண பூஜையை அரசன் செய்தான். 9. ஸத்யநாராயணனுடைய அனுக்ரஹத்தால் மக்கள் தனம் இவைகளுண்டாயிற்று. இகலோகத்தில் ஸுகத்தை அனுபவித்து விட்டு கடைசியில் வைகுண்டத்தை அடைந்தான். 10-11 பரமதுர்லபமான இந்த ஸத்யநாராயண விரதத்தை யார் செய்கிறாரோ, அவருக்கு பலனைத் தரும் இந்த புண்யகரமான கதையை பக்தியுடன் யார் சிரவணம் செய்கிறாரோ, அவருக்கு தனதான்யாதிகள் ஸத்யநாராயணனுடைய பிரஸாதத்தால் உண்டாகும். தரித்திரன் பணத்தைப் பெறுவான். பந்தத்தில் அகப்பட்டவன் பந்தத்தின்றும் விலகுவான். 12. பயந்தவன் பயத்தினின்றும் தப்புவான். இதுஸத்யமே. இதில் சந்தேகமில்லை இஷ்டப்பட்டபலனை அனுபவித்துவிட்டு கடைசியில் வைகுண்டத்தை அடைவான் 13 இவ்வாறு மகரிஷிகளே! ஸத்யநாராயண விரதத்தை உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். இதைச்செய்தால் மனுஷ்யர்களுக்கு எல்லா துக்கமும் நிவர்த்தியாகும். 14-15. முக்கியமாய் கலியுகத்தில் ஸத்யநாராயணனுடைய பூஜை பலனைத் தருகிறது. சிலர் அந்த பகவானை காலனென்கிறார்கள். சிலர் ஸத்யன் என்றும், சிலர் ஈசுவரனென்றும், சிலர் ஸத்யநாராயணனென்றும், சிலர் ஸத்யதேவன் என்றும் சொல்லுகின்றனர். அவர் பலவகை ரூபங்களை தரித்துக்கொண்டு எல்லோருக்கும் அபீஷ்டங்களை அளிக்கிறார். 16-17 கலியுகத்தில் ஸநாதனனான பகவான் நாராயணன் ஸத்யநாராயண விரதத்தின் உருவாக இருக்கப்போகிறார், ரிஷிசிரேஷ்டர்களே! இதை யார் சிரவணம் செய்கின்றனரோ படனம் செய்கின்றனரோ, ஸத்யநாராயணனுடைய ப்ரஸாதத்தால் அவர்களுடைய பாபங்கள் ஸத்யமாய் நசித்துப்போகின்றன.

ஸ்ரீ ஸ்காந்தபுராணம் ரேவாகண்டத்திலுள்ள
ஸ்ரீஸத்யநாராயண விரதகதை ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

---

### ஐந்தாவது ஸர்க்கம்.
(முன் தொடர்ச்சி.)

---

எப்பாடுபட்டாவது அவைகளை உயிர்பிக்கவேண்டுமென்று நிச்சயித்தனர். அதற்கு ப்ரதிபந்தகமாயுள்ள பௌத்தமதத்தை பகிரங்கமாக கண்டிக்கவேண்டுமென்றும், பௌத்தமதத்தைக் கண்டிக்க பௌத்தமதத்தை சரியானபடி கற்றறியவேண்டியது அவசியமென்றும் கண்டுகொண்டு, பட்ட நாராயணனுடன் கலந்து யோசித்து, மூத்தவரான பட்டகுமாரன் 'நான் ஓர் பௌத்தன் என்று, எண்ணிக்கொள்ளும்படி மாறுவேஷத்துடன் ஓர் பௌத்தாசாரியானிடம் சிறிது காலம் வசித்து பௌத்தமதத்தைத் தெரிந்துவருகிறேன்" என்று சொல்லி ஓர் பௌத்த குருவிடம் சென்று, அவனுக்கு சுசுரூஷை செய்து, பௌத்த சாஸ்திரத்தை கற்றறிந்துவந்தார். 38. ஒரு நாள் அந்த சாக்யாசாரியாரின் வீட்டு மேல்மாளிகையில் பட்டகுமாரர் அவருடைய குருவுக்கு எண்ணை தேய்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த குரு அவருடைய பௌத்த சாஸ்திரத்தை பாடம் சொல்லிக்கொண்டிருக்க அச்சமயம் வேதம் பொய் அது அபிரமாணம்என்று வேதத்தின்மீது தூஷணைகளை குரு சொல்லிவந்ததைக் கேட்டு பட்டகுமாரர் மகா துக்கமடைந்து மனமுடைந்து தாரைதாரையாய் கண்ணீர் சொரிந்தார். அந்த கண்ணீர் பௌத்தாசாரியனுடைய காலில் விழுந்தது. 39. பட்டகுமாரனுடைய கண்களிலிருந்து வெளிவந்த அந்த கண்ணீர் சூடாயிருந்ததைக்கண்டு கொண்டு, தனது சிஷ்யன் தான் சொல்வதில் ப்ரியப்படாமல் வருத்தப்படுகிறானென்றும், அதனால்தான் அவனுடைய கண்ணீர் சூடாயிருக்கிறதென்றும், உண்மையில் பௌத்தனாயிருக்கும்பக்ஷத்தில் வேதத்தை தூஷித்தது இவனுக்கு இவ்வளவு வருத்தத்தை விளைவித்திருக்காதென்றும், ஊகித்து அந்த சாக்யாசாரியன் இதர சிஷ்யர்களைக்கூவி "இவன் யாரோ ஒரு வஞ்சகன். நம்மிடம் சிஷ்

யனும் இருக்கிறான். இவன் பௌத்தனன்று. இவனைக்கொல்லுங்கள் கொல்லுங்கள்" என்று சொன்னான். 40. உடனே அநேகர் ஓடிவந்து பட்டகுமாரனைப்பிடித்துக் கொல்லப் பார்க்கவும், அந்த பௌத்தர்களிடமிருந்து தப்பிப்பிழைக்க மிகவும் உயர்ந்ததான அம்மாளிகையிலிருந்து வெளியே பூமியில் குதித்தார். அப்படி குதிக்கும்பொழுது "வேதங்கள் ஸத்யமாயிருந்து பிரமாணமாயிருக்கும்பக்ஷத்தில் இவ்வளவு உயரத்திலிருந்து குதிக்கும் என்னை ஸம்ரக்ஷிக்கட்டும். நான் பிழைக்கிறேன்." என்று உரக்கக்கூவினார். 41. அப்பொழுது அந்த கட்டிடத்தில் வெளியே நீட்டிக்கொண்டிருந்த ஓர் மூளை இவருடைய கண்ணிற் பட்டு பட்டகுமாரனுடைய ஓர் கண் பொட்டையாய்ப்போய் விட்டது. பட்ட குமாரர் நான் இவ்வளவு ப்ரதிக்ஞை செய்தும் என்னுடைய கண் போய்விட்டதே! உண்மையில் வேதங்கள் பிரமாணங்கள்தானோ அல்லவோவென்று சம்சயப்பட்டு திகைத்தார். உடனே வாயுபகவான் அசரீரியாய் "ஹே விப்ரோத்தமா! வேதங்கள் பிரமாணங்களே! அவைகளை நம்பிய உனக்கு யாதொரு பயமுமில்லை. நான் இவ்வளவு உயரத்திலிருந்து கீழே விழுந்தாலும் நான் பிழைக்கப்போகிறேன்" என்று வேதத்தினிடம் திடமான நம்பிக்கையை நீ கொள்ளாமல் "வேதங்கள் பிரமாணமாயிருந்தால் என்னை ஸம்ரக்ஷிக்கட்டும்" என்று அதன் பிரமாண்ய விஷயத்தில் நீ சம்சய புத்திகொண்டதால் உன் ஓர் கண்போய்விட்டதேயன்றி வேதம் அபிரமாணமன்று. என்றறிவித்தார். 42. இந்த செய்தி தேசமெங்கும் பரவியது. ஓர் சமயம் அந்த தேசத்து அரசன் § பட்டகுமாரரை இரகசியமாய் பௌத்தர்களுக்கு தெரியாமல் தனது அரண்மனைக்கு வரவழைத்து அவருக்கு மிகுந்த மரியாதைகளைச் செய்து "விப்ரோத்தமா! தாங்கள் அதிக உயர்ந்த மாளிகையிலிருந்து குதித்ததாயும் தங்கள் ஓர் கண் போனதற்குக் காரணத்தை யோசித்திருக்கையில் தாங்கள் வேதத்தின் ப்ரமாண்யத்தில் நிச்சய புத்தி கொள்ளாமல் சம்சயப்பட்டதுதான் காரணமென்று அசரீரியாய் தேவர்கள் சொன்னதாயும் இதைத்தான் தற்போது மகா ஜனங்கள் சரியென்று ஆதரிப்பதாயும் நான் கேட்டுவருகிறேன். ஆகவே தேவர்களும் மனுஷ்யர்களும் ஒப்புக்கொண்டிருக்கும் தங்கள் மதம் எது? தாங்கள் எது தத்வமென்று

§ [குறிப்பு:- ஸுதன்வா என்று இந்த அரசனுடைய பெயரென்றும் இவன் மகேந்திரனுடைய அவதாரமென்றும் மாதவீயம் சங்கர விஜயத்தால் வெளியாகிறது.



அறிந்திருக்கிறீர்களோ அதைச் சொல்லுங்கள். நான் அதை அனுஷ்டிக்கிறேன் என்று சொன்னான். 43. இவ்வாறு அரசன் சொன்னதைக்கேட்டு பட்டகுமாரர் சிறிதும் பயமின்றி அரசனுடைய மனதிற்பதியுமாறு இவ்வாறு சொன்னார். மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் அவரவர்களின் வர்ணாசிரமங்களுக்கு உசிதமான கர்மங்களைச் செய்யவேண்டுமேயல்லாது அவைகளை விட்டுவிடலாகாது. 44. வேதங்கள் சரியான ஞானத்தைத்தருகின்றனவென்பதுதான் என்னுடைய மதம். அப்படித்தான் தேவதைகளும் எனக்கு கட்டளையிட்டிருக்கின்றனர். உத்தமமான கதியை வேண்டுகிறவர்கள் வேதங்களை திரஸ்கரிக்கும் பௌத்தமதத்தை அவலம்பிக்கலாகாது. அதை விட்டொழிக்கவேண்டும். 45. ஹே ராஜன்! நீங்கள் என்னிடம் பிரஸாதமடைந்திருக்கும்பக்ஷத்தில் உங்கள் எதிரில் பௌத்தர்களை நான் வாதத்தில் ஜயிக்கிறேன். அவர்கள் மட்டில் தங்கள் மதத்தை ஸ்தாபிக்கட்டும். நான் கோரமான ப்ரதிக்ஞை செய்கிறேன். அவர்களுடைய மதத்தை நான் கண்டித்து அவர்களை நான் ஜயிக்காமலிருக்கும்பக்ஷத்தில் நிச்சயமாய் சிறிதும் சங்கோசமின்றி உடனே என்னை எரிகிற நெருப்பில் தூக்கிப்போடுங்கள் என்று பட்டகுமாரர் அரசனிடம் சொன்னார். 46. பட்டரின் வார்த்தைகளைக்கேட்டு அரசனுக்கு அவரிடம் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது. மிகுந்த சந்தோஷத்துடன் அரசன் "பட்டரே! நீங்கள் அவர்களை ஜயித்துவிடும்பக்ஷத்தில் பௌத்தர்களை நிர்மூலமாக்கி எல்லோரையும் கொளுத்திவிடுகிறேன். இது நிச்சயம்" என்று சொன்னார். 47. அரசன் சொன்ன வார்த்தையில் பட்டகுமாரருக்கு நம்பிக்கையும் ஏற்பட்டது. அரசன் அவ்வாறே செய்வாரென்று நிச்சயங்கொண்டார். வெகு சீக்கிரமே வாதத்தை துவக்க நான் சித்தமாய் வருகிறேன் என்று அரசனிடம் சொல்லி அவரிடமிருந்து விடைபெற்று வீட்டிற்கு வந்தார். இந்த சுப விருத்தாந்தத்தை தன் தம்பியான பட்ட நாராயணனிடமும் தந்தையான சபாசாரியாரிடமும் அறிவித்து, வேத விரோதிகளான பௌத்தர்களை நசுக்க தனக்கு ஆதரவு ஏற்பட்டதே என்று எல்லோருடன் அகமகிழ்ந்தார். 48. அந்த

தேசத்து அரசன் பக்ஷபாதமின்றி வாதத்தை நடத்த தயாராய் இருந்தவுடன், தன் தந்தையான சபராசாரியார் ஜைமனி சூத்ரங்களுக்கு இயற்றிய பாஷ்யத்திற்கு தூஷணுனுமானங்கள் நிறைந்து இதரர்கள் கண்டிக்கமுடியாததும் பௌத்த சாஸ்திரத்தை சேதிக்கக்கூடியதுமான வியாக்யானமொன்றை எழுதினுர். 49. பிறகு ஒரு நாள் பட்டகுமாரர் தன் தம்பியான பட்ட நாராயணரை அழைத்துக்கொண்டு பௌத்தர்களுடன் வாதம் செய்வதற்காக பகிரங்கமாய் அரசனுடைய நகரத்திற்கு வந்தார். அவர்கள் வந்த காரியத்தை அறிவிக்கும் ஓர் விளம்பரப் பத்திரிகையை கொடியைப்போல் அந்நகர் வெளிவாசல் கதவில் தொங்கவிட்டார். 50. அரசனும் ஆங்காங்கிருந்த பௌத்த பண்டிதர்களை எல்லாம் வரவழைத்து மகா சபையைக் கூட்டி பட்ட குமாரருக்கும் பௌத்தர்களுக்கும் வாதம் நடைபெறும்படி செய்தார். இவ்வாதத்தில் பந்தயம் யாதெனில் வாதத்தில் தோற்றுப்போனவர்களை அக்னியில் தூக்கிப்போடுவதுதானென்றும் முதலில் இரு கக்ஷியினராலும் நிஷ்கரிஷிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பட்டகுமாரர் தன்னுடைய மதத்தை ஸ்தாபிக்காமல் பௌத்தர்களின் மதத்தை கண்டித்துக்கொண்டு விதண்டாவாதத்தாலேயே பௌத்தர்களை வென்றூர். வேதங்களை அபிரமாணமென்று சொல்லி அவைகளை அழித்துப்போட எத்தனித்ததாலேயே ஆயுஸ்க்ஷீணமாகியிருந்த அந்த பௌத்தர்களை அரசன் அந்த வாதத்தில் ஏற்படுத்திக்கொண்டிருந்த பந்தயப்படி எரிகிற நெருப்பில் போட்டுவந்தான். 51. இவ்வாறு பட்டகுமாரன் அந்த அரசனைக்கொண்டு கண்ணிற்படும் பௌத்தர்களையெல்லாம் நெருப்பில் போடச் செய்துவரவும் பௌத்தர்கள் மூலைமூலைக்கோடிவிட்டனர். இந்நாட்டிலேயே சமையல் செய்யுமிடங்களில், பௌத்தர்களின் வேஷங்களையெல்லாம் கலைத்து ஆஸ்திகர்களைப்போல் புண்ட்ராதிகளை தரித்து இரகசியமாய் அவர்களை பௌத்தர்களென்று இதரர்கள் ஸுலபமாய் கண்டுகொள்ளாதபடி அதிகமாய் வெளியே வராமல் பதுங்கிக்கிடந்த பக்கஸ்வாமி முதலிய பௌத்தர்கள், இனி இந்த தொல்லை வேண்டாமென்று கப்பல் ஏறி வியாபாரிகளுடன் தேசாந்தரம் ஓடிவிட்டனர். சிலர் இந்த வேஷத்துடனே இங்கு இருப்போம். உண்மை வெளியானுல் அடுத்த தேசத்திற்கு ஓடிவிடுவோமென்று அந்த தேசத்தின் எல்லைபுறகிராமங்களில் திரிந்துகொண்டிருந்தனர்.

ஐந்தாவது ஸர்க்கம் முடிந்தது. (தொடரும்)



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

109 லிங்கேரிஸ்வாமிராஜாசாரியார். (ஸு. மடம்)

688 அனுவ்யாக்யான தீபிகா. 689 த்வித்வ்வாதார்த்தம்.
690 தர்க்கதீபிகா.

110 லிங்கேரி ராமசந்திராசாரியார்.

691 குருகுணஸ்தவம்

111 லிங்கேரி வியாஸாசாரியார்.

692 பிருந்தாவனுக்யானம்

112 குண்டலகிரி பிரம்மாசாரியார்.

693 ஆன்ஹிகபத்ததி.

113 குண்டலகிரி ஆசாரியார். (வியாஸராஜமடம்.)

694 பட்டோஜிகுட்டனம்
695 தீர்த்தப்ரபந்தம்.
696 கண்டகோத்தாரம் (தாத்பரிய நிர்ணய டிப்பணி)
697 தாத்பரியநிர்ணயடீகா.
698 நியாயாமிருதடிப்பணி.
699 ப்ரபாதபஞ்சகஸ்துதி
700 ஸுதாபஞ்சாதிகரண டிப்பஎ
701 அத்வைதாமிருதபங்கம். (தத்வப்ரகாசிகாடிப்பணி.)

114 ராயச்சூர் ஆசாரியார்.

702 தத்வப்ரகாசிகாடிப்பணி. 703 தத்வநிர்ணயடிப்பணி.

115 சிக்கோடி பகவந்தராவ்.

704 பாவப்ரதீபம் தத்வப்ரகாசிகா டிப்பணி.
705 பிரம்மஸூத்ர பூர்வபக்ஷவித்தாந்தயுக்தி.
706 ஐதரேயகண்டார்த்தம்.
707 பிருஹதீஹஸ்ரவ்யாக்யா
708 பாகவதம் 6-12 ஸ்கந்தம் வ்யாக்யா.

116 வெங்கடநரஸிம்ஹாசாரியார்.

709 தந்திரஸாரடிப்பணி.

117 ராமசந்திராசாரியார்.

710 பதார்த்தஸங்கிரஹம். 711 தத்வப்ரகாசிகாடிப்பணி.
712 ஸுதாடிப்பணி.

118 பாங்கிரி ஆசாரியார்.

713 கீதாவிவ்ருதி.
714 ஆத்யஸூத்ரார்த்தம்.
715 கிருஷ்ணாமிர்தமகார்ணவம்.

119 ஸாவித்ரி ராகவேந்திரஸூரி.

716 விஷ்ணுஸஹஸ்ரநாமவ்யாக்யா.

120 வேங்கடகிருஷ்ணாசாரியார்.

717 ரிக்ஸந்த்யாபாஷியம்.

121 நரஸப்பாசாரியார்.

718 பிரமாணபத்ததிடிப்பணி.

122 கேசவபட்டாசாரியார்.

719 பிரமாணபத்ததிடிப்பணி.

123 ஐஜீ ராமாசாரியார். வ்யாஸதத்வக்ஞயதி (ஸூமதீந்திரமடம்.)

720 ஸூதாடிப்பணி ரஸாஞ்ஜனி குரு, லகு.
721 வ்யஜுஜ நியாயாமிருத டிப்பணி.
722 தத்வநிர்ணயடிப்பணி குரு, லகு.
723 மந்தநந்தினி பாகவத ஸப்தம ஸ்கந்தவ்யாக்யா.
724 சந்திரிகாடிப்பணி.
725 சரதாகமப்ராமாணுநிகரணம்.
726 யதிப்ரணவகல்படிப்பணி.

124 நாராயணபட்டாசாரியார்.

727 ப்ரமாணபத்ததிடீகா.
728 தீர்த்தப்ரபந்தடீகா.

125 பைடீனஸி நாராயணாசாரியார்.

729 அத்வைதகாலாநலம்.
730 மத்வமந்திரார்த்தம்.

126 ஆனந்தபாலாசாரியார்.

731 அணுபாஷியடிப்பணி.
732 ஈசாவாஸ்யடிப்பணி.
733 காடகடிப்பணி.
734 ஆதர்வணடிப்பணி.
735 மாண்டூகடிப்பணி.
736 தலவகாரடிப்பணி.
737 நியாயவிவரணடிப்பணி.
738 தசாவதாரஸ்துதி.

127 வாணிவாவ விட்டலாசாரியார்.

739 தத்தஸங்கியானடிப்பணி.

128 வாணிவாவ நரஸிம்ஹாசாரியார்.

740 தத்வஸங்கியாணடிப்பணி.
741 பிரமாணபத்ததிடிப்பணி.

129 மிருத்திகா ஸ்ரீனிவாஸாசாரியார்.

742 குருநாமரத்னமாலா.
743 ஐதரேயகண்டார்த்தம்.



130 பாண்டுரங்காசாரியார்.

744 தத்வநிர்ணயம் டிப்பணி.

131 ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள்.

745 ப்ரம்மஸூத்ரபாஷ்யடிப்பணி.
746 அணுபாஷ்யடிப்பணி.
747 நியாயவிவரணடிப்பணி.
748 அணுவ்யாக்யானடிப்பணி.
749 நிக்ப்ரஸ்தானவ்யாக்யா.
750 ப்ரமேயதீபிகாடிப்பணி.
751 நியாயதீபிகாடிப்பணி.
752 மாயாவாதகண்டனடிம்பணி.
753 உபாதிகண்டனடிப்பணி.
754 ப்ரபஞ்சமித்யாத்வானுமான கண்டனடிப்பணி.
755 தத்வஸங்க்யானடிப்பணி.
756 தத்வோத்யோதடிப்பணி.
757 தத்வவிவேகடிப்பனி.
758 தத்வநிர்ணயடிப்பணி.
759 ப்ரமாணலக்ஷணடிப்பணி.
760 கதாலக்ஷணடிப்பணி.
761 கர்மநிர்ணயடிப்பணி.
762 பிருஹதாரண்யபாஷிய டிப்பணி.
763 தைத்திரீயபாஷ்யடிப்பணி.
764 ஈசாவாஸ்யபாஷ்யடிப்பணி.
765 காடகபாஷ்யடிப்பணி.
766 சாந்தோக்யபாஷ்யடிப்பணி.
767 ஆதர்வணபாஷ்ய டிப்பணி.
768 மாண்டூகபாஷ்யடிப்பணி.
769 ஷட்ப்ரச்ன பாஷ்ய டிப்பணி.
770 தலவகாரபாஷ்யடிப்பணி.
771 ஐதரேயபாஷ்யடிப்பணி.
772 உபஸம்ஹாரவிஜயம்.
773 அப்பைய்யகபோலசபேடிகா.
774 மத்வதந்த்ரமுகபூஷணம்.
775 நயமஞ்ஜரி ப்ரம்மஸூத்ரவ்யாக்யானம்.
776 சக்ரமீமாம்ஸா.
777 ஆமோதம் (நியாயாமிருதவ்யாக்யானம்.)
778 அதிகரணமாலா (நியாயாமிருத மீமாம்ஸாவ்யாக்யா.)
779 தத்வப்ரகாசிகாடிப்பணி.
780 ப்ரமாணபத்ததிடிப்பணி.
781 நயமுகுரா.
782 நயபஞ்சகமாலா.
783 மீமாம்ஸாநியாயமாலா.
784 சந்திரிகா நியாயவிவரணம்.
785 பரதத்வப்ரகாசிகா.
786 பேதவித்யாவிலாஸ.
787 மத்வாத்வகண்டகோத்தாரணம்.
788 நாராயணசப்தார்த்தநிர்வசனம்.
789 ப்ரம்மஸூத்ரநியாயஸங்க்ரஹம்.
790 நியாயமௌக்திகமாலா.

[இவர் 104 கிரந்தங்களை இயற்றியுள்ளார். அவைகளின் நாமங்களை சரியான ருஜுவுடன் எமக்கு அறிவிப்பவர்களுக்கு ரொக்கம் ரூ ஐந்தையாவது அல்லது ரூ. பத்து கிரயமுள்ள மாத்வமித்திரன் வால்யங்களையாவது அவர்களின் இஷ்டப்படி அனுப்பப்படும். இதற்கு காலம் 1–3–33 ப–ர்.]

# ஓர் மறுப்பு.

(முன் தொடர்ச்சி.)

ஸ்ரீசங்கராசாரியார் ஸ்வாமிகளைப்போன்ற அத்வைதிகள் வெளிக்கு வெகு ஆடம்பரமாக ஸ்ரீவேதவியாஸரையும் அவருடைய ப்ரம்மஸூத்திரங்களையும் துதிக்கின்றனரேயன்றி உண்மையில் ஸ்ரீவேதவியாஸரின் சித்தாந்தத்தை அத்வைதிகள் பின்பற்றியவர்களன்று. அவர்களின் ஆசாரியாளான ஆதிசங்கராசாரியார் உண்மையில் பிரம்மஸூத்திரங்களுக்கு பொருத்தமான பாஷ்யகர்த்தாவுமன்று. ஸ்ரீவேதவ்யாஸர் பிரம்மஸூத்திரங்களில் த்வைதஸித்தாந்தத்தைத்தான் அறிவித்திருக்கிறார். அவைகளின் அர்த்தமாக அத்வைதத்தை ஸ்ரீசங்கராசாரியார் வெகு சிரமப்பட்டு வேண்டுமென்று புகவிட்டிருக்கிறார். த்வைத ஸித்தாந்தத்தையே அறிவிக்கும் ப்ரம்மஸூத்ரங்களுக்கு அவைகளை இயற்றிய ஸ்ரீவேதவியாஸரை ஜயித்து அத்வைதமே அவைகளின் அர்த்தமென்று ஸ்ரீசங்கராசாரியார் சொன்னாரென சங்கரவிஜயங்கள் ஸ்பஷ்டமாய் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாய் "வ்யாஸோபதிஷ்டஸூத்ராணாம் த்வைத வாக்யாத்மனாம்சிவே| அத்வைதமேவ ஸூத்ரார்த்தம் ப்ராமாண்யேன கரிஷ்யதி அவிமுக்தே ஸமாஸீனம் வ்யாஸம்வாக்யைர் விஜிக்யச||" என்று சிவரஹஸ்யமென்ற ஓர் நூலின் வசனங்கள் இவர்களால் தாராளமாய் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஸ்ரீவேதவியாஸரை நேரில்கண்டு வாதாடி அவர் தமது சித்தாந்தத்திற்கு விரோதமாக பேசியதால் ஸ்ரீசங்கராசாரியார் கோபங்கொண்டு அவருடைய கன்னத்திலறைந்ததுமன்றி அவரைக் குப்புறத்தள்ளும்படி தனது சிஷ்யருக்கு ஆக்ஞைபிட்டதாயும் ஓர் சங்கரவிஜயமும் அறிவிக்கிறது. இதைத்தவிர சங்கரபாஷ்யத்தாலும் 'சாஸ்த்ர திருஷ்ட்யாதுபதேசோவாமதேவவத், ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச' என்ற இரண்டு ஸூத்ரங்களைத்தவிர மற்ற 562 ஸூத்ரங்களும் த்வைதத்தைதான் அறிவிக்கின்றனவென்று ஸ்ரீசங்கராசாரியாரே ஒப்புக்கொண்டிருப்பதாய் வெளியாகிறது. இந்த ஸூத்ரங்களும்கூட



சற்றும் அத்வைதத்திற்கு ஸாதகமாயில்லை என்று ஸ்ரீஉத்தராதி மடம் ஸ்வாமிகளால் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ப்ரஸ்தானத்ரயங்களில் அத்வைதம்தான் சொல்லப்பட்டிருக்கிறதென்கிறார்கள். அவைகளிலொன்றாகிய ப்ரம்மஸூத்திரம் அத்வைதத்திற்கு எவ்வளவு தூரம் ஆதாரமாயிருக்கிறதென்பது உங்களுக்கு தெரிந்தது. உபநிஷத்துக்களில் அத்வைதம் ஓரே இடத்திலும் த்வைதம் ஓரே இடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் ஸ்ரீசங்கராசாரியார் ஸ்வாமிகள் சொல்லுகிறார். அத்வைதம் ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை என்பதை இப்பத்திரிகையின் பக்கங்களில் பன்முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. த்வைதம் ஓரே இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று சொல்லி 'யத்ரஹித்வைதமிவபவதி' என்ற சுருதியை ஸ்ரீஸ்வாமிகள் பிரஸ்தாபிக்கிறார். அவன்போல் நீ இருக்கிறாய் என்பதால் நீ அவனல்ல என்று ஏற்படுகிறதாம். ஆகையால் த்வைதமில்லையாம். அவன் இல்லாமலேயே இருக்கும்பக்ஷத்தில் அவனைப்போல் என்று சொல்வார்களா என்று நாம் கேட்கிறோம். ஆதலால் அவன் இருக்கிறானென்று ஏற்பட்டு த்வைதம்தான் சித்திக்கிறதென்கிறோம். நீ மலடிமகனைப்போல் இருக்கிறாய் என்று எங்கேயாவது சொல்வதுண்டா? இருக்கிறதைத்தான் திருஷ்டாந்தமாய் கூறுவார்களேயன்றி இல்லாததை திருஷ்டாந்தமாய் கூறமாட்டார்கள். நீ அவனல்ல என்று ஏற்படுகிறதென்கிறார். ஆம். நீயும் இருக்கிறாய்; அவனும் இருக்கிறான். அவனைப்போல் நீ இருக்கிறாயேயல்லாமல் நீ அவனேயல்ல. நீ வேறு; அவன் வேறு என்று த்வைதமே சித்திக்கின்றதெனலாம். அத்வைதம்தான் சித்திப்பதில்லை. இந்த சுருதி த்வைதத்திற்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை தருகிறதென்று ஸ்ரீசங்கரரின் சிஷ்யரான ஸுரேச்வராசாரியார் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸ்ரீஸ்வாமிகளோ த்வைதம் சித்திக்கிறதில்லை என்கிறார். ஸ்ரீசங்கரரும்கூட இந்த சுருதி ஜகத்திற்கு ஸத்யத்வத்தை போதித்தபோதிலும், 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்' என்ற வேறொரு சுருதி ஜகத்தின் மித்யாத்வத்தை போதிப்பதால் இந்த சுருதியால் தெரியவரும் ஸத்யத்வத்தை நான் ஒப்புக்கொள்ளமுடியாதென்று தனது

சொந்த அபிப்பிராயத்தைதான் அறிவித்திருக்கிறார். இந்த சுருதியால் ஜகத்தின் பாரமார்த்திகஸத்யத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறதென்று இதனால் ஸ்ரீசங்கரரும் ஒப்புக்கொள்வதாகவே ஏற்படுகிறது. தோஷங்கொண்ட சாமானியர்கள் சூரியனை ஒரு சாண் என்று அறிவித்தபோதிலும் ஆப்ஸர்வேடரியில் டெலெஸ்கோப் மூலமாய் பார்க்கும் கண்ணுக்கு உண்மை தெரியவருகிறது. திவ்விய திருஷ்டியையடைந்தபின் அர்ஜுனன் ஸாக்ஷாத்தாய் ஜகத்து, ஜீவன், பகவன் மகிமைகள், தாரதம்யங்கள் முதலியவைகளை ஸத்யமாகவே பார்த்திருக்கிறான். அத்வைதிகளின் கொள்கையின்படி கிளிஞ்சலின் ஞானம் ஏற்பட்டவுடன் கல்பிதமான வெள்ளி மறைந்துபோவதுபோல் பிரம்ம ஞானம் வந்தவுடன் கல்பிதங்களாயுள்ள மேற்கண்ட ஜகத், ஜீவபாவம், பரஸ்பரபேதம் பகவன் மகிமை முதலியவை அர்ஜுனனுக்கு மறைந்துபோயிருக்கவேண்டுமல்லவா? அவை அப்படி மறைந்து போகாமல் அர்ஜுனன் அதைக்கண்டான். ப்ரஸ்தான த்ரவ்யங்களிலும் அத்வைதத்திற்கு ஆதாரமில்லை. அத்வைதமென்பது அத்வைதிகள் கனு காண்கின்றனர் அவர்களின் கொள்கையின்படியே இதுவரை யாருக்கும் ஐக்ய ஞானம் பிறந்து ஒருவருக்கும் முக்தராயிருக்கமுடியாது. அத்வைததத்வத்தை உபதேசித்த ஆதி சங்கராசாரியாருக்கும் தேசபந்தம் விலகிப்போய் ப்ரம்மபாவம் வரவில்லை. சுகாசாரியார் வாமதேவர் முதலியவர்களுக்குக்கூட ஐக்ய ஞானம் பிறந்து அவர்கள் முக்தர்களானார்களென்று சொன்னது யதார்த்தமானதல்லவென்று அப்பய்யதீக்ஷிதரும் ஒப்புக்கொண்டதே. ஆதலால் த்வைதமில்லை. அத்வைதமே ஸத்யம் என்று சொன்னது முழுப்பொய்.

---

## விசேஷ தினங்கள்.

புஷ்யமாஸம்.

| | | |
|---|---|---|
| 30—12—32 | சுக்ரவாரம் | சிரவண உபவாஸம், விஷ்ணு பஞ்சக உப |
| 2—1—33 | சோமவாரம் | தனுர்வ்யதீபாதம். |
| 7—1—33 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 8—1—33 | பானுவாரம் | ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் புண்யதினம். |
| 11—1—33 | புதவாரம் | பௌர்ணமி. |
| 12—1—33 | குருவாரம் | சங்க்ராந்தி போகி. |
| 14—1—33 | சனிவாரம் | உத்தராயண புண்யகாலம், நா. 11-21. |
| 22—1—33 | பானுவாரம் | ஏகாதசி. |
| 23—1—33 | சோமவாரம் | த்வாதசி மணி 8-30 க்குள் பாரணை. |
| 25—1—33 | புதவாரம் | அமாவாஸை தர்பணம், விஷ்ணுபஞ்சக உட இல்லை. ஸ்ரீபுரந்தரதாஸர் புண்யதினம். |



# ஸ்ரீமஹாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பதினேழாவது அத்யாயம்.)

(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

---

ஜயமுள்ள ஸ்ரீகிருஷ்ணன் க்ஷீரஸமுத்திரத்தில் வாஸம் செய்யும் ஸ்ரீஹரிதான். பக்ஷியை வாகனமாகக் கொண்டவன். ஸ்ரீகிருஷ்ணன் ஹரியில்லாமலிருந்தால் அவனுக்கு கருடவாகனமாகான். இந்த ஏகாரியான கிருஷ்ணனால் நாமெல்லோரும் பலதடவை யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டோம். நாமெல்லோரும் ஒன்று கூடியும் எங்களால் அவன் ஒருதடவையாவது தோற்கப்படவில்லை. இந்த கிருஷ்ணனின் தமையனான பலராமன் முன்பு அடியால் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த என்னைக்கொல்ல எத்தனப்பட்டான். அசரீரிவாணி உண்டாக அதனால் என்னைக்கொல்லாமல் விட்டான். இந்த கிருஷ்ணனுடைய பலம் உத்தமமென்று நாம் என்னசொல்வது. ஒவ்வொரு யுத்தத்திலும் இந்த கிருஷ்ணன் சுபம் வ்ரணமில்லாதவனாய் எங்கள் எல்லோரையும் துரும்பைப்போல் செய்தான். அதிகமான சங்கடம் நேர்ந்திருக்கும் இந்த சுயம்வர சமயத்தில், நாம் என்ன செய்தால் எங்களுக்கு சௌக்யமாயிருக்குமோவென்று சொல்லிக்கொண்டு ஜராஸந்தன் காந்தியிழந்து தலையை தொங்கப்போட்டான். ஜராஸந்தன் பேசியபின், முன் ஜன்மத்தில் பகவானுடைய த்வாரபாலகனாயிருந்த தந்தவக்ரனுடன் கூடிய சிசுபாலன் ஒருசமயம் நற்புத்திகொண்டு "ஹே ராஜசிரேஷ்டனான ஜராஸந்தா! என் வார்த்தையைக்கேள்' 'என்றான். "ருத்ரன் ப்ரம்மா இவர்களுக்கு விஷ்ணுஸ்வாமி என்று சிலர் சொல்லுகின்றனர். அந்த வார்த்தை அஸத்யமல்ல. எங்களிருவர்களுக்கும் ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனம் உண்டாவது ஒரு காலத்தில் உத்கிருஷ்டமான பக்தியைத் தருகிறது. மறுபடியும் ஸ்ரீகிருஷ்ணரிடம் கோபமும், த்வேஷமும், உண்டாகிறது. இந்த பக்தியும் த்வேஷமும் உண்டாவதற்குக் காரணத்தை நாம் அறிய

மாட்டோம். ஸ்ரீகிருஷ்ணர் உத்தமரான ஹரி. அதில் சந்தேகமில்லை. நாம் ஸௌகத்தைவேண்டி அவரிடம் சத்ருபாவத்தைவிட்டு அந்த கிருஷ்ணரை சரணமடைவோம். இந்த காரியம்தான் எங்களுக்கு ஸௌகத்தைத்தரக்கூடியது. இதற்கு மாறாக நடந்தால் எங்களுக்கு எங்கும் ஸௌகம் ஏற்படாது.'' என்றிவ்வாறு சிசுபாலன் தந்தவக்ரன் இவர்கள் பேசவும் ஜராஸந்தன் இவர்களை எரிப்பதுபோல் பார்த்தான். பிறகு ஸால்வராஜன் கோபத்தால் துடிதுடித்துக்கொண்டு, கோபத்தால் துடிதுடித்துக்கொண்டிருந்த ஜராஸந்தனைப்பார்த்து சிசுபாலன் தந்தவக்ரன் இவர்களை நிந்தித்து சிறித்துக்கொண்டு பேசினான். கிருஷ்ணன் ஹரி என்ற வார்க்தை பொய்யல்ல. அந்த ஜனார்த்தனனான கிருஷ்ணன் எங்களைக்கொல்வதற்காக யாதவனாய் பிறந்திருக்கிறார். நாம் பூர்வஜன்மத்தில் தானவ ச்ரேஷ்டர்கள். அந்த விஷ்ணுவிடம் எப்பொழுதும் ஸ்திரமான த்வேஷத்தைச் செய்வது எங்களுக்கு சொந்த தர்மம். ஸ்வதர்மத்தில் நாமிருந்துகொண்டு கிருஷ்ணனால் பிராணனை விட்டாலும் நிச்சயமாய் நற்கதியை நாம் அடைவோம். எங்களுக்கு இவன் உத்தமமானதெய்வம். ஹே ஜராஸந்தா! நீ எங்களுக்கு குரு. கிருஷ்ணன் எங்களுக்கு சத்ரு; என்றிவ்வாறு ஸால்வராஜன் பேசவும் ஜராஸந்தன் பலே பலே என்றான். ருக்மி முதலான ராஜர்களும், தந்தவக்ரன் சிசுபாலன் இவர்களும் ஸால்வராஜன் சொன்னபடி சொன்னார்கள். குச்சிதமான புத்தியுள்ள ராஜர்கள் யுத்தம் செய்வதில் திடமான நிச்சயம் செய்தனர். தந்தவக்ரன் சிசுபாலன் இவர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் விஷயத்தில் எப்போதும் நாம் விரோதம் செய்கிறோமென்று சொல்லி குருவான ஜராஸந்தனுடைய ப்ரஸாதத்தை ஸம்பாதித்துக்கொண்டனர்.

## ஸ்ரீகிருஷ்ண பட்டாபிஷேகம்.

பாபபுத்திகொண்ட ஜராஸந்தாதிகள் மீண்டும் ஆலோசித்தனர். ஸ்ரீகிருஷ்ணன் இந்த சுயம்வரத்துக்கு வந்தால் ருக்மணிதேவியை நிச்சயமாய் அடைவான். ஸ்ரீகிருஷ்ணன் மூவுலகங்களிலும் ஸௌந்தர புருஷனாவான். ருக்மணியோ மகா ரூபவதி.



ஸ்ரீகிருஷ்ணன் தன் முககாந்தியால் எல்லா உலகின் காந்தியையும் ஜயித்தவன். அதனால் எல்லோரையும் வசப்படுத்திக்கொள்வான். அவன் தன்னுடைய பாஹுபலத்தால் எல்லா ஜனங்களையும் ஜயிப்பான். அவர்களை அதனாலும் வசப்படுத்திக்கொள்வான். எல்லா ஸ்திரிகளிலும் சிரேஷ்டளான ருக்மணிதேவி சத்ருக்களை ஜயித்த உத்தமரூபியாயும் சர்வக்ஞ சிரேஷ்டனுமான ஸ்ரீகிருஷ்ணனை நிச்சயமாய் ஏற்றுக்கொள்வாள். ருக்மணி கிருஷ்ணனை விவாகம் செய்துகொண்டாளானால் நாம் விசேஷமாய் மானபங்கத்தை அடைவோம். அந்த கிருஷ்ணனை பாணங்களால் தடுக்கும் சக்தி எமக்கு ஒருபோதும் இல்லை. ஆகையால் அந்த ருக்மணியின் சுயம்வரமண்டபத்திற்கு அவன் எப்படி வராதிருப்பானோ அப்படி செய்வதுதான் உத்தமமான உபாயம். கிருஷ்ணன் அங்கு வரமுடியாமலிருப்பதற்காக இந்த ராஜர்களின் சமாஜத்தில் கிருஷ்னனுக்கு எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் சரியே நாம் ஆஸனத்தைத்தரலாகாது. அர்க்யம் பாத்யம் முதலான பூஜையையும் செய்யலாகாது. எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்பட்ட கிருஷ்ணன் நாம் உத்தமமான ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும்பொழுது எங்கள் எதிரில் கீழே பூமியின்மீது ஒருக்காலும் உட்காரமாட்டான். அப்பொழுது அந்த கிருஷ்ணன் அஹங்கார அபிமானங்கொண்டு கோபத்துடன் தன் மதுரா பட்டணத்திற்கு கட்டாயம் போய்விடுவான். கிருஷ்னன் போனபின் நாம் ருக்மணியின் சுயம்வரத்தை நடத்துவோம். என்றிவ்வாறு எல்லா ராஜர்களும் செய்த முடிவைக்கேட்டு பீஷ்மகராஜனுடைய தம்பியான க்ரதனென்றராஜன் அவனுடைய தம்பியான கைசிகனுடன் ஸ்ரீகிருஷ்ணரை எதிர்கொண்டழைக்கச் சென்றான். க்ரதகைசிகர்கள் ஸ்ரீகிருஷ்ணருடைய பாதாரவிந்தங்களில் நமஸ்காரம் செய்து ஸ்ரீகிருஷ்ணரை தன் வீட்டிற்குள் வரச்செய்து ஸ்ரீகிருஷ்ணருக்கு உத்தமமான ஆஸனத்தைத்தந்து உத்தமமான பூஜையைச் செய்தனர். பிறகு இந்திரனுடைய வார்த்தையைக்கொண்டு இந்திரதூதனொருவன் ஜராஸந்தன் முதலான ராஜர்களிடம் வந்தான். அர்த்தபுஷ்டியுள்ள இந்த வார்த்தையாடினான். நான் இந்திரனுக்கு வேண்டியவன். இந்திரனின்

பார்வையில் எப்போதுமிருக்கக்கூடியவன். உங்களுக்கெல்லாம் அதிபதியான தேவேந்திரன் அரசர்களான உங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார். என்னவென்றால் ஸ்ரீகிருஷ்ணர் ஜராஸந்தன் முதலான எல்லா ராஜர்களுக்குமே முக்யமான அதிபதி. அப்படிப்பட்டவர் வேறொருவருமில்லை என்று இந்த எண்ணத்துடன் நீங்கள் சந்தேகமின்றி உடனே ஸ்ரீகிருஷ்ணனை ராஜாதிராஜன் சக்ரவர்த்தி என்ற பட்டத்தில் பட்டாபிஷேகம்' செய்யுங்கள். அப்படி நீங்கள் அவரை பட்டாபிஷேகம் செய்யாதிருந்தால் உங்கள் சிரஸ்ஸின்மீது நான் வஜ்ஜிராயுதம் போடுவேன். என்றிவ்வாறு இந்திரனுடைய ஆக்ஞை ஏற்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுங்கள் என்று அந்த இந்திரனுடைய தூதன் சொல்லி புறப்பட்டுபோனான். அந்த இந்திரதூதனுடைய வாக்யத்தை ஜராஸந்தாதிகள் கேட்டு இன்னமும் மனதில் சங்கடப்பட்டனர். மீண்டும் இப்படிப்பேசினர். இந்திரன் மிக்க கர்விஷ்டனாயிருக்கிறான், கிருஷ்ணன் பிறப்பதற்குமுன் இந்திரன் எங்களில் ஒவ்வொருவரைக்கண்டாலும் பயப்பட்டுக்கொண்டிருந்தான். இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரை அண்டியிருப்பதால் எங்களை அதிகமாய் பயப்படுத்துகிறான். அந்த இந்திரன் மறைவாய் இருந்துகொண்டு எங்கள்மீது வஜ்ஜிராயுதத்தைப்போட்டால், வரம்பெற்றதால் நாம் மரணமில்லாதவர்களாயிருப்பினும், நாம் சங்கடப்படுவோம். முன்பு ஸ்வர்க்கத்திலிருக்கும் இந்திரனை ஹிம்சிக்க நாம் சக்தர்களாயிருந்தோம். இப்போது இந்திரனிடம் யுத்தத்திற்கு சென்றால் கிருஷ்ணன் எங்களுடன் யுத்தத்திற்கு வருவான். ஆகையால் சாரங்கபாணியான கிருஷ்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்வதால் சசீபதியான இந்திரன் எங்கள்மீது வஜ்ஜிராயுதம் போடாமலிருக்கும்பக்ஷத்தில், நாம் கிருஷ்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்துவிடுவோம். தனு என்ற ராக்ஷஸன் ப்ரம்மாவின் வரத்தால் மரணமில்லாதவனாயிருந்தாலும், இந்திரனுடைய வஜ்ஜிராயுதம் அடிவிழுந்து அதனால் அவனுடைய சிரஸ்ஸு வயிற்றுக்குள்போய் கபந்தன் ஆனான். அவ்வாறு நாம் கிருஷ்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்யாமற்போனால் இந்திரன் கிருஷ்ணனுடைய ஆசிரயபலத்தால் நாம் கபந்தாஸுரனைப்போல் அவஸ்தைப்படும்



படிசெய்வான். என்றிவ்வாறு ஜராஸந்தாதிகள் நிச்சயித்தவர்களாய் எல்லா ராஜர்களையும் கிருஷ்ணனை பட்டாபிஷேகம் செய்துவர அனுப்பினர். "ஜராஸந்தாதி எல்லா ராஜர்களும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்வார்களேயானால் கர்வமிழந்த அந்த ஜராஸந்தாதிகளுக்கு அனுகூலமாக ஒருவரும் அவர்களுடன் சேரமாட்டார்கள். அப்பொழுது அஸுரர்களும்கூட தங்கள் ஜீவனத்திற்காக ஸ்ரீகிருஷ்ணனையே தங்கள் ரக்ஷகனாய் செய்துகொள்வார்கள். இதனால் தேவகாரியத்திற்கு நாசமுண்டாகும்." என்றிவ்வாறு இந்திரன் ஆலோசித்து ருக்மி, ஸால்வராஜன், சிசுபாலன் இவர்களுடன் கூடிய ஜராஸந்தன் ஸ்ரீகிருஷ்ணருக்கு பட்டாபிஷேகம் செய்வதற்காக செல்லவேண்டாமென்று, தூதன்மூலமாய் அறிவித்தார். ஆகையால் ஜராஸந்தன், ருக்மி, ஸால்வராஜன், சிசுபாலன் இந்த நால்வர்களைத்தவிர்த்து மற்ற எல்லா ராஜர்களும் இந்திரனுடைய ஆக்ஞையின்பேரில் ஸ்ரீகிருஷ்ணரை சக்ரவர்த்திகளுக்கும் அரசன் என்று கூறி பட்டாபிஷேகம் செய்ய ஆயத்தமானார்கள். 'பிறகு இந்திரபகவான் தன்னுடைய உத்தமமான ஆஸனத்தை ஸ்ரீகிருஷ்ணருக்கு அனுப்பிவைத்தார். ஆகாயத்திலிருந்து வந்திறங்கிய அந்த உத்தமமான ஆஸனத்தில் ஸ்ரீகிருஷ்ணர் உட்கார்ந்தார். ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர், கருடபகவான் க்ரதகைசிகர்கள் இவர்களின் கையை பிடித்து தன்னுடைய ஆஸனத்தில் உட்கார்த்திவைத்துக்கொண்டார். பிறகு ச்ரேஷ்டர்களான ரிஷிகளுடன்கூடிய எல்லா ராஜர்களும் ஸ்ரீகிருஷ்ணரை ஸுவர்ணமய கடங்களிலுள்ள உதகங்களால் பட்டாபிஷேகம் செய்தனர். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் ப்ரம்மருத்திராதி தேவர்கள் முதலானவர்களால் துதிக்கப்பெற்றார். எல்லா தேவகந்தர்வர்களாலும் கானம்செய்யப்பட்டார்.

## ஸ்ரீகிருஷ்ணரின் விச்வரூபம்

பிறகு ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் பீஷ்மகராஜனைப்பார்த்து பேசினார். ஹே பீஷ்மகராஜனே! உன்பெண்ணை உத்தேசித்து சுயம்வரம்செய்ய நீ அபேக்ஷித்தாய். அந்தசுயம்வரம் உன்புண்யத்திற்கு காரணமாகாது. உன்பெண்ணான ருக்மணியாய் லக்ஷ்மீ

தேவியே அவதாரம்செய்திருக்கிறாள். அந்த ருக்மணிக்கு தந்தையான நீ அவளை நாராயணனுக்கு விவாகம் செய்துகொடுக்காமலிருந்தால் உன் ஸம்பத்து தொலைந்து நீ தமஸ்ஸை அடைவாய். இந்தவாக்யத்தை உன் ஹிதத்திற்காக சொல்லியிருக்கிறேன். என் பிரயோஜனத்திற்காக நான் சொன்னேனென்று யோசிக்காதே. பாரியை எனக்கு வேண்டுமென்று விருப்பத்தால் நான்சொல்லவில்லை. நான் எப்பேர்பட்ட ரூபங்கொண்டவனென்பதைப்பார். என்றிவ்வாறு ஈசனான ஸ்ரீகிருஷ்ணர் சொல்லி தன்னுடைய விச்வரூபம் வெளியாகும்படிசெய்தார். அது எப்பேர்ப்பட்டதென்றால் உத்தமமானது: கணக்கற்றசிரஸ்ஸு பாஹுக்களைக்கொண்டது. பலவகையான தேஜஸ்ஸால் வியாப்தமானது. கணக்கற்ற ரூபத்துடன் கூடியது. விசித்திரமானகிரீடம், குண்டலங்கள் பாஹுபூஷணங்கள் உத்கிருஷ்டமான ஹாரங்கள் பாதபூஷணங்கள் இவைகளுடன் கூடியது. பிரகாசிக்கும் கௌஸ்துபமணியின் பிரகாசத்தையும் பிரகாசப்படுத்துவது. மங்களமான வஸ்திரத்துடன் கூடியது. இப்பேர்பட்டதான விச்வரூபத்தை ஸ்ரீகிருஷ்ணன் பீஷ்மகராஜனுக்குக் காட்டி எனக்கு எப்பேர்பட்ட ஸ்திரிஜனங்களிருக்கிறார்களென்பதைப் பார் என்று சொல்லி அநந்தரூபமுள்ளவளும் உத்தமளும் மனுஷ்யதிருஷ்டியால் ருக்மணியின் சரீரத்தைவிட ரூபத்தில் சிறந்தவளுமான ஸ்ரீதேவியைக் காட்டினார். அப்படியே அவரிடம் பிரம்மாதி தேவர்களையும் காட்டினார். அற்புதமான இந்த விச்வரூபத்தைப்பார்த்து பீஷ்மகராஜன் மிகவும் பயந்தான். தாங்கள் சொன்னபடி நான் செய்கிறேனென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணரின் சரணங்களில் விழுந்தான். கமலநேத்ரனும் பக்ஷிவாகனனுமான ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய விச்வரூபத்தை மறுபடியும் மறைத்து அவருடைய புஜத்தால் ஸம்ரக்ஷிக்கப்பட்டதாயுள்ள மதுராநகரத்திற்கு பிரயாணம் செய்தார். லக்ஷ்மிதேவியின் சுயம்வரம் நடத்துவது பாபமாயிருக்கும்பக்ஷத்தில் ஜனகராஜன் வருணபகவான் இவர்கள் தங்கள் குமாரிகளான சீதை, மகாலக்ஷ்மிக்கு எப்படி சுயம்வரம் நடத்தினார்களென்று பூர்வபக்ஷம் வந்தால் அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது. உதகராஜனான வருணபகவானும்



மிதிலாபதியான ஜனகராஜனும் ஸ்ரீதேவிக்கும் சீதாதேவிக்கும் சுயம்வரம் நடத்தினாலும் என்பெண் நாராயணனைத்தான் நிச்சயமாய் அடைகிறாள். சுயம்வரம் நடத்துவது அரசர்களுக்கு ஸ்வதர்மம் என்று அபிப்பிராயப்பட்டு சுயம்வரத்தை நடத்தினார்களாதலால் வருணபகவானுக்கும் ஜனகராஜனுக்கும் தோஷமுண்டாகவில்லை. பீஷ்மகராஜனோ ஸ்ரீகிருஷ்ணருக்குத்தான் ருக்மணி போய்ச்சேரவேண்டுமென்று சுயம்வரத்தை இச்சிக்கவில்லை. ஆகையால் பீஷ்மனுக்கு தோஷமேற்படுமென்றிருந்தது. தயையுள்ளவர்களில் ச்ரேஷ்டரான ஸ்ரீகிருஷ்ணர் பீஷ்மருக்கு போதித்துவிட்டு ஊருக்குச் சென்றபின் பீஷ்மகராஜன் ஸ்ரீகிருஷ்ணருக்கு சுவாதீனமானதைப் பார்த்து ஜராஸந்தன் முதலான ராஜர்கள் மறுபடியும் யோசித்தனர்.

பீமசேனருக்கு உத்தமமான கீர்த்தியையும் தர்மத்தையும் உண்டாக்க இச்சைக்கொண்ட ஸ்ரீகிருஷ்ணனால் இதுவரையில் சொல்லப்படாதிருந்த ஜராஸந்தன் இவ்வாறு அறிந்தான். சிவனுடைய உத்தமமானவரம் எனக்கு வந்திருப்பதால் இந்த கிருஷ்ணன் என்னைக்கொல்ல முடியாதவனாயிருக்கிறான். நான் இதற்கு முன் அவனால் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் இனி சிவனுடைய அருளால் கிருஷ்ணனை ஜயிக்கப்போகிறேன் என்று ஜராஸந்தன் எண்ணிக்கொண்டான். ஒவ்வொரு யுத்தத்திலும் ஜராஸந்தன் ஸ்ரீகிருஷ்ணரால் தோல்வியடைந்தும் நான் அடுத்தாற்போல் ஸ்ரீகிருஷ்ணரை ஜயிக்கப்போகிறேனென்ற ஆசையால் திரும்பித் திரும்பி யுத்தம்செய்ய எத்தனப்பட்டான். எந்தகாலத்திலேயும் ருத்ரனை அவன் அவமானம் செய்யப்போவதில்லை. ஆகவே ஜராஸந்தன் மறுபடியும் ராஜர்களைப் பார்த்து எதற்காக இவ்வாறு பேசினான்? எங்கள் பராக்கிரமம் இனி எதற்காக? அதை அடக்கவேண்டும். எங்களை எப்போதும் கிருஷ்ணன் ஜயிக்காதவனும் அரசனல்லாதவனுமாதலால்; அவனுக்கு ஆஸனம் தரக்கூடாதென்று நாம் யோசித்தோம். அரசர்களே அந்த யோசனை வேறுவிதமாய் முடிந்தது. இந்த கிருஷ்ணன் ராஜசிரேஷ்டர்களின் சபையில் மகேந்திரனின் ஆஸனத்திலேறினான். ஸ்ரீகிருஷ்ணன்

அரசனென்றே ஒப்புக்கொள்ளாத எங்களாலேயே அவன் சக்ரவர்த்தி சிரேஷ்டத்வத்தை அடைந்தான். ஆகையால் நாம் கிருஷ்ணனை எப்படி ஜயிப்போம். அதைப்பற்றி யோசியுங்கள். சிசுபாலன் ருக்மணியை எப்படி பெறுவான். இந்த சிசுபாலன் எனக்கு ஸ்வீகாரப்பிள்ளை. என் ஔரஸ குமாரனான சகதேவனைவிட என் அன்பிற்கு பாத்திரன். இவனுக்கு நான் விவாகம் செய்துவைக்க வேண்டும். மகாரூபவதியான ருக்மணி இவனுக்கு தகுதியானவள் சைவாகமங்களில் எனக்கு சிஷ்யர்களாயுள்ள ருக்மி ஸால்வராஜன் பௌண்ட்ரக வாஸுதேவன் இவர்களுடன் கூடிய வேறு அரசர்களே! என்னுடைய இந்த அபீஷ்டத்தைச் செய்யுங்கள். இவ்வாறு ஜராஸந்தன் சொன்னபிறகு ருக்மியின் அனுமதியின் பேரில் ஸால்வராஜன் இவ்வாறு பேசினான்.

## காலயவனனின் யுத்தம்.

இனி சுயம்வர நடக்கப்போவதில்லை. அதைநிருத்தியாய்விட்டது. இந்தருக்மி தன்னுடைய தங்கையான ருக்மணியை சிசுபாலனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்போகிறான். சிசுபாலனுக்கு ருக்மணியைக்கொடுக்க இச்சைகொண்ட தன் மகனான ருக்மணியை மீறிப்போக கிழவனும் துர்பலனுமான அவனுடைய தந்தை பீஷ்மகராஜனுக்கு ஸாமார்த்தியமில்லை. கிருஷ்ணன் தானாக ருக்மணியின் விவாகத்திற்கு வந்து ஜெயித்து கன்னிகையை அபகரிப்பான். ஆகையால் கன்யாதானத்திற்கு முன்பே கிருஷ்ணனைக்கொல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது சுபமே. மகதநாட்டிற்குஅரசனான ஜராஸந்தா! இந்தவிஷயத்தில் ஓர் உபாயம் யோசித்திருக்கிறேன். என்னவென்றால், கர்க்க முனிவரை அவருடைய மைத்துனன் ஒருசமயம் பரிகாசம் செய்தான். கிருஷ்ணனால் தூண்டப்பட்ட யாதவர்கள் அவர்களின் புரோகிதரான கர்க்கமுனிவரை அவனுடைய மைத்துனன் ஓர் நபும்ஸகனென்று பேசியபொழுது நகைத்தனராதலால் கர்க்க முனிவர் யாதவர்களிடம் கோபங்கொண்டார். யார் பூமியில் கிருஷ்ணனை இல்லாமல் செய்வானோ, யார் யாதவர்களை நாசம் செய்வார்களோ, அப்பேர்பட்ட மகனை சீக்கிரம் தேடிக்கொள்ளுகிறேன். கிருஷ்ணனை ஆசிரயித்திருக்கிறோமென்ற பலத்தால் இந்த யாதவர்கள் என்னை பரிகசிக்கின்றனர். என்றிவ்வாறு கர்க்க முனிவர் சொல்லி காட்டிற்கு புறப்பட்டுபோனார். இரும்புப் பொடியைத் தின்றுகொண்டு சிவனைஉத்தேசித்து தபஸ்செய்தார்.

(தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன்தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., அவர்கள் எழுதுவதாவது:—

அம்மட்டில் நான் அறிவேன் என்று சாக்ஷிசொன்னால் அந்த சாக்ஷியம் பிரதிவாதி எடுத்துக்கொண்டுபோனசொம்பு வெள்ளிச்சொம்பா அல்லது தங்கச்சொம்பா என்பதை நிஷ்கரிக்க ஸாதகமில்லை. அதுபோல் ஜீவப்ரம்மர்கள் பின்னர்களா? அல்லது அபின்னர்களா? என்று விவாதம் நேரிட்டிருக்கையில் அத்வைதிகள் தங்களுக்கு சாக்ஷியாக எடுத்துக் கொண்ட தத்வமஸி என்ற சுருதி சித் என்று மட்டில் (அதாவது ப்ரம்மமென்றுமட்டில்) சொல்லி வாயைமூடிக்கொண்டுவிட்டது. அதனால் இந்தவாக்கியம் ஜீவப்ரம்மர்கள் பின்னர்களென்று சொல்வதற்கோ அபின்னர்களென்று சொல்வதற்கோ ஸாதகமாக ஆகிறதில்லை. தத்வமஸி முதலான அத்வைதிகளின் மகாவாக்கியங்கள் எல்லாமே அவர்களை இம்மாதிரி மகா ஆபத்தில்தான் கொண்டுபோய்விட்டன. ஆகவே ஐக்ய மதத்திற்கு சுருதிகளில் ஒன்றேனும் ஆதாரவில்லை என்று ஸித்தித்தது.

அல்லது அத்வைதிகள் இப்படியும் சொல்லலாம். ஒருவன் ஒரு செம்மறி ஆட்டை வளர்த்துவந்து சரியான சந்தர்பத்தில் அவனுடைய மார்பில் பாயவந்ததுபோல் நாம் ப்ரியமாய் எண்ணிய தத்வமஸி முதலான சுருதிகள் அகண்டார்த்தத்தில் தாத்பரியமெனச்சொல்லி நாம் ஆபத்திற்குள்ளாவது வேண்டாம். தத்வமஸிவாக்கியம் லக்ஷணையால் ஐக்ய ஞானத்தைத் தருகிறதென்கிறோம். அதாவது தத்வமஸி என்பதில் தத் என்பதற்கு லக்ஷணையால் அதன்ஸர்வக்ஞத்வம் முதலானதர்மங்களை மொட்டையடித்து பிறகு மீதிஇற்கும் சித்தும், த்வம் என்ற பதத்திற்கு லக்ஷணையால் அதன் அல்பக்ஞத்வம் முதலான தர்மங்களை மொட்டையடித்து பிறகு மீதிஇற்கும் சித்தும் "அஸி" ஒன்றே என்றும் இவர்களிருவர்களின் விருத்தமானதர்மங்கள் பொய்யே என்றும் அர்த்தம் செய்கிறோம். இதனால் எங்கள் இஷ்டம் கைகூடுகிறது என்கின்றனர்.

சரிதான். அவர்கள் இஷ்டம் கைகூடியது. ஆனால் ஒருவன் திவ்யமான கமல வைரத்தைக் கொடுத்துவிட்டு மண்ணாங்கட்டியை வாங்கியதாகிறது. ஒருவன் வீட்டில் பிறந்த குழந்தையை விற்று ஓர் சண்டாளனை விலைக்கு வாங்கியதாகும். தத்வமஸி வாக்யத்திற்கு கமல

வைரத்தைப்போல் விலையுயர்ந்ததும் தன் ஜ்யேஷ்டமகனைப்போல் தகுந்ததான முக்யார்த்தம் வேதபரமாக ஜொலித்துக் கொண்டிருக்க அதை விட்டு லக்ஷணையால் அமுக்கியமாயுள்ள ஐக்யார்த்தத்தை கல்பனை ஏன் செய்யவேண்டுமோ! ஸுபாம்ஸுலுக் இத்யாதி வைதிகமான வ்யாகரண சூத்ரத்தின்படி தத்பதத்திற்கு ஆறுவிபக்திகளின் அர்த்தமும் ஏற்படுகிறது. அப்பொழுது (தேனத்வமஸி) ப்ரம்மத்தால் நீ இருக்கிறாய். (தஸ்மைத்வமஸி) ப்ரம்மத்துக்காக நீ இருக்கிறாய், (தஸ்மாத்வமஸி) ப்ரம்மத்தினிடமிருந்து நீ இருக்கிறாய், (தஸ்யத்வமஸி) ப்ரம்மத்தின் அதீனனாய் இருக்கிறாய். (தஸ்மின்த்வமஸி) ப்ரமத்தின் ஆசிரயத்தில் நீ இருக்கிறாய். இத்யாதி அநேக அர்த்தங்கள் முக்யவிருத்தியாலேயே ஏற்படுகின்றன. இந்த அர்த்தம் இந்த தத்வமஸிக்கு அடுத்தாப்போல் முன்னாடியுள்ள ஸன்மூலாஸர்வா: ப்ரஜா:'' இத்யாதி சுருதிக்கும் பொருத்தமாகவே இருக்கிறது. இப்படி இருக்க எல்லாபிரமாணங்களுக்கும் விருத்தமானதாயும் நிரவகாசமான வேறுப்ரமாணங்களில் சொல்லப்படாமலிருப்பதாமுள்ள ஐக்யார்த்தில் அத்வைதிகளின்மனம் ஏன் விழவேண்டுமோ இப்படித்தான் அஹம்ப்ரம்மாஸ்மி ப்ரக்ஞானம் ப்ரம்ம இத்யாதிவாக்யங்கள் ப்ரம்மம் என்றுமட்டில் ஞானத்தைத்தருவதாய் அத்வைதிகள் சொல்வதால் இந்தவாக்கியங்கள் ஜீவப்ரம்மர்களின் அபேதத்திற்கு ஸாதகமாக இவைகள் லக்ஷணாவிருத்தியால் ஐக்யத்தை போதிப்பதாய் சொல்லும் பக்ஷத்தில் த்வைத ஸித்தாந்த விசாரமென்ற நூலில் வேதபரமாய் முக்யார்த்தமே நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் ஐக்யார்த்தத்தை விட்டுவிடவேண்டியதுதான். வேதபரமான அர்த்தம்தான் ஏற்றுக்கொள்ளத் தக்கது.

வேதம் மனோவாக்குகளுக்கு எப்பொழுதும் எட்டாத (அதாவது அக்ஞேயனான) நிர்குணப்ரம்மத்தை போதிக்கிறதென்பதற்கு என்ன ப்ரமாணம்? இந்த கேள்விக்கு பதில் சொல்லமுடியாமல் சாஸ்திரிகளே ஏன் முழிக்கிறீர். அங்காரத்தை நெற்றியில் தீத்திக்கொண்டிருக்கும் மாத்வர்களுக்கு நீர்தலை குனிந்துகொள்ள வேண்டும் தான். மாத்வர்களை இவர் என்ன தூஷித்தால்தானென்ன? மாத்வர்களிடம் இவன் அன்பைக்காட்டி தமது நூலில் ஸ்பஷ்டமாய் வாய்விட்டு நர்குணப்ரம்மம் வேதத்தில் வாச்யவிருத்தியால் (முக்யவிருத்தியால்) எங்கும் சொல்லப்படவில்லை என்று ஒப்புக்கொண்டுவிட்டார். ஆகவே முக்யவிருத்தியால் த்வைதிகளின் ப்ரம்மத்தைச்சொல்லும் அநந்தவாக்யங்கள்தான் ப்ரபாலமானவைகள். இதனால் த்வைத தத்வம் வைதிகமாகவும் அத்வைத தத்வம் அவைதிகமாகவும் ஆகிறதென்பதில் சந்தேகமுமுண்டோ? சாஸ்திரிகளே! இதற்குபதில் சொல்லும். (தொடரும்.)



# காடகோபநிஷத்

(முன் தொடர்ச்சி.)

8. இந்த ஜீவர்கள் நித்ரை செய்துகொண்டிருக்கும்பொழுது எந்த பகவான் அவருடைய இஷ்டப்படி அந்த ஜீவன்கள் விரும்பும் பதார்த்த சமூகங்களை நிர்மாணம் செய்துகொண்டே விழித்திருக்கிறாரோ, அந்த பரமாத்மாதான் துக்கமில்லாதவர். அவர்தான் பரப்ரம்மம். அவர்தான் வேதாதிகளில் ப்ராக்ஞர்களால் நாசமில்லாதவரென சொல்லப்படுகிறார். அவரிடம்தான் எல்லா ப்ரபஞ்சங்களும் ஆசிரயித்திருக்கின்றன. எவனும் அவரை மீறி நடப்பதில்லை. இப்பேர்பட்ட குணமுள்ளவர்தான் ஹே நசிகேதஸ்ஸே! நீர் கேட்ட பரப்ரம்மம். 9. உலகில் ப்ரவேசித்திருக்கும் சேதனரான அக்னிபகவான் எப்படி பக்வம் செய்கிறவர் ஒருவரோ அப்படிக்கிருந்தும் அவருடைய ஒவ்வொரு ரூபத்திற்கும் பூதாக்னியும் அதன் அம்சங்களும் ப்ரதிபிம்பங்களாக இருக்கின்றனவோ அப்படித்தான் எல்லா ப்ராணிகளிலேயும் ப்ரவேசித்திருக்கும் பகவான் ஒருவரேயாவார். அவர்தான் சுவதந்திரர், வேறுயாருமில்லை. அந்த பகவானுடைய ரூபத்திற்கு ப்ரதிபிம்பனான ஜீவன் உண்டானான். பிரதிபிம்பமென்றால் ஒருவனுக்கு அதீனமாயிருந்து அவனைப்போல் இருக்கிறதென்பது பொருள். ஜீவன் பகவானுக்கு அதீனமாயிருந்து பகவானைப்போல் சிறிது ஸமானமாக இருக்கிறானாகலால் ஜீவன் பகவானுக்கு ப்ரதிபிம்பனாவான். ஆனால் அவர்களில் அபேதம்தானோவென்றால் அபேதமில்லை. பகவான் பிம்பஸ்வரூபரானதால் ஜீவனைவிட தனிப்பட்டவன். ஜீவனுடைய சொரூபாத்மாவாக மாட்டான். 10 உலகில் ப்ரவேசித்திருக்கும் சேதனரான வாயு பகவான் ஒருவரேயாயினும் அவருடைய ஒவ்வொரு ரூபத்திற்கும் ப்ரதிபிம்பமாயுள்ள ஜடரூபங்களான அநேக வாயுக்கள் உண்டாகின்றனவோ அப்படித்தான் எல்லா ப்ராணிகளிலேயும் ப்ரவேசித்திருக்கும் பகவான் ஒருவரேயாவார். அவர் ஸ்வதந்திரர். அவருக்கு பிரதிபிம்பமாக ஜீவன் உண்டானான். அந்த

ஜீவன் பிம்பமான பகவானிடமிருந்து தனிப்பட்டவன். அந்த பகவத் ஸ்வரூபமே ஆகமாட்டான். 11. பகவான் சங்கடப்படும் உலகில் ப்ரவேசித்திருக்கிறாரென்பதால் அவருக்கு சங்கடமுண்டோவென்றால் அப்படிக்கில்லை. எல்லா ப்ராணிகளுக்கும் சக்ஷூரிந்திரியத்திற்கு நியாமகராய் சக்ஷூஸ் எனப்பெயர்கொண்டவராய் சக்ஷூரிந்திரியத்திற்குள் பகவான் இருப்பினும் வெளிக்கண்ணின் சம்பந்தமான தோஷத்தால் எப்படி ஸம்பந்தமடைவதில்லையோ, அப்படித்தான் ஸ்வதந்திரனான பரமாத்மா எல்லா ப்ராணிகளிலேயும் வாசம் செய்துகொண்டிருப்பினும் அவர் ஜீவஸ்வரூபனே இல்லாமல் அவனைவிட தனிப்பட்டவரானதால் ஜீவஸம்பந்தமான துக்கங்களால் ஸம்பந்தமடைவதில்லை. 12 [பகவான் ஒருவரேயானால் அவர் அநேக ஜீவன்களுக்கு நியாமகராய் இருப்பது எப்படி? என்பதற்கு அவருடைய ஸ்வாதந்திரியம் விளக்கிக்காட்டப்படுகிறது.] எல்லா ப்ராணிகளின் அந்தர்யாமியாயும் ஸமாதிகமில்லாதவராயும் எல்லா ப்ரபஞ்சத்தையும் தன் அதீனத்தில் வைத்துக் கொண்டவராயுமிருக்கும் எந்த பகவான் ஒன்றேயான தன்னுடைய ரூபத்தை அவருக்கு அதீனமாயுள்ள ஜீவாதிகளின் ஸ்வரூபத்தை அனுஸரித்து அநேக ரூபங்களாய்ச் செய்துகொள்கிறாரோ பகவத் ரூபத்தை தன் ஹிருதயத்தினுள் இருப்பதாய் எந்த எந்த ஞானிகள் கண்டுகொள்கின்றனரோ அவர்களுக்குத்தான் சாசுவதஸுகமாயுள்ள மோக்ஷம் ஏற்படுகிறது. இதரானுக்கில்லை. 13. நித்ய வஸ்துக்களைவிட அதிக நித்யனானவரும் என்றால் அந்த பதார்த்தங்களுக்கு நித்யத்வத்தைத் தருபவரும், சேதனர்களிலும் பரம சேதனரும் ஒருவருமான எந்த பகவான் அநேக ஜீவர்களுக்கு அவரவர்களின் மனோபீஷ்டங்களைச் செய்கிறாரோ அந்த பரமாத்மாவை தங்களுடைய ஹிருதயத்தில் இருப்பவராய் எந்த ஞானிகள் காண்கின்றனரோ அவர்களுக்குத்தான் சாசுவதமான சுகமுண்டாகும். இதரர்களுக்கு இல்லை. 14. இப்பேர்பட்ட மகாமகிமையுள்ள எந்த பவத் ஸ்வரூபத்தை இப்பேர்ப்பட்டதென்று குறிக்கமுடியாததாயுள்ள பரம ஸுகாத்மகமானதென்று ஞானிகள் அறிகின்றனரோ, அப்பேர்பட்ட ஸுகாத்மகமான ப்ரம்மஸ்வரூபத்தை அவருடைய ப்ரஸாதமின்றி எப்படி அறிவேன் என்று நசிகேதஸ் ப்ரச்னம் செய்ய யமபகவான் சொல்வதாவது :—

(தொடரும்.)



# சண்டாள ஸம்பர்க்கம்.

(முன் தொடர்ச்சி.)

(அத்ரி) சொல்வதாவது:— "ரஜஸ்வலா யதா ஸ்ப்ரிஷ்டா ச்வான சண்டாள வாயஸை:| நிராஹாரா பவேத் தாவத் ஸ்நாத்வா காலேன சுத்யதி" நாய் சண்டாளன் காகம் இவைகள் ஓர் பஹிஷ்டா ஸ்திரீயை தொட்டுவிட்டால் அவள் ஸ்நானம் செய்யும்வரை உபவாஸமிருக்க வேண்டுமென்றும் அப்படிக்கிருந்தால்தான் அவளுக்கு சுத்தி என்றும் சொல்கிறார். நாம் தனியேவிலக்கி வைத்திருக்கும் பஹிஷ்டா ஸ்திரீக்கும் சண்டாளனின் ஸ்பரிசம் தகாதென்றார். (10) அவர் "அந்த்யஹஸ்தாத்து விக்ஷிப்தம் காஷ்டலோஷ்ட| த்ருணானிச நஸ்ப்ருசேத் ததோச்சிஷ்ட மஹோராத்ரம் ஸமாசரேத்"|| சண்டாளனுடைய கையால் கொண்டுவரப்பட்ட விறகுக்கட்டு, செங்கல்லு, வைக்கோல்கட்டு இவைகளையும்கூட தொடலாகாதென்று கடுமையான விதானம் செய்திருக்கிறார். ஆயினும் அவர் "ஆர்த்ரமாம்ஸம் க்ருதம்தைலம் ஸ்நேகாஸ்ச பலஸம்பவா:| அந்த்யபாண்ட ஸ்திதாஸ்த்வேதே நிஷ்க்ராந்தா: சுத்திமாப்னுயு:" பக்வமாகாத பச்சை மாம்ஸம் நெய் எல்லாவகை எண்ணெய் இவைகள் சண்டாளனுடைய பாத்ரத்தில் இருக்கும்வரை அசுத்தமென்றும் அங்கிருந்து வெளியே வந்துவிட்டால் சுத்தமானவைகளே என்றும் அனுமதிக்கிறார் (11) ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் சொல்லப்படுவதாவது:— சண்டாள ஸ்பர்சனே ஸம்பாஷணாயாம் தர்சனே ச தோஷ:| தத்ர ப்ராயச்சித்தம வகாஹன மபாம் உபஸ்பர்சனே ஸம்பாஷணாயாம் ப்ராம்மண ஸம்பாஷா தர்சனே ஜ்யோதிஷாம் தர்சனம்" சண்டாளனைத்தொட்டாலும், அவனுடன் பேசினாலும், அவனைப்பார்த்தாலுமே தோஷமுண்டு. இவைகளுக்கு ப்ராயச்சித்தம் யாதெனில் சண்டாளனைத்தொட்டால் ஜலத்தில் அமிழ்ந்து மூழ்கி ஸ்நானம் செய்தால் சுத்தி. சண்டாளனுடன் பேசினால், பிராம்மணனுடன் ஸம்பாஷித்தால் அந்த தோஷம் நீங்கும். சண்டாளனைப்பார்த்தால் ஆகாயத்திலுள்ள ஜ்யோதிஸ்ஸுகளான சூரிய சந்திர நக்ஷத்திராதிகளைப் பார்த்தால் அந்த தோஷம் நீங்குமென்றார். (12) அவரும் "ரஜஸ்வலாப்யந்த்யஜைர் ஸ்ப்ருஷ்ட்வா சுனச ச்வபசேன சத்ரிராத்| ரோபோஷிதா பூத்வாபஞ்சகவ்யேன சுத்யதி|| என்றார். என்றால் பஹிஷ்டாஸ்திரீக்கு சண்டாளன், நாய், ச்வபசன், இவர்களுடைய ஸ்பரிசம் ஏற்பட்டால் அவள் மூன்று நாள் உபவாசமிருந்து பஞ்சகவ்யம் ப்ராசனம் செய்யவேண்டுமென்கிறார். (13) இவரே "அந்த்ரஜை:

காளிதா கூபாஸ்தடாகா வாப்ய ஏவச| ஏஷு ஸ்நாத்வாச பீத்வாச ப்ராஜாபித்யேன சுத்யதி" சண்டாளர்களால் வெட்டப்பட்ட கிணறுகள், குளங்கள், கேணிகள் இவைகளில் ஸ்நானம் செய்தாலும், பானம் செய்தாலும் ப்ராஜாபத்ய ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றூர். (14) ஸுமந்து சொல்லும்பொழுது "சண்டாளதர்சனே சூர்யதர்சனம், ஸம்பாஷணே ப்ராம்மணுதிவ்யவஹார ஸம்ஸ்பர்சனே ஸசேலம் ஸ்நானமாசரேத்" சண்டாளனைப் பார்த்தால் அந்த தோஷம் நீங்க சூரியனைப் பார்க்க வேண்டும். அவனுடன் பேசினுல். ப்ராம்மணுதி பூஜ்யர்களுடன் பேச வேண்டும். அவனைத்தொட்டால் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறுர் (15) வேதவ்யாஸஸ்மிருதியில் "வராடோ மேதசண்டாளௌ தாச ச்வபசகோலிகா:| ஏதேந்த்யஜாஸ்ஸமாக்யாதா ஏசான்யே ச கவாசனு:| ஏஷாம் ஸம்பாஷணே ஸ்நானம் தர்சனுதர்கவீக்ஷணம்" என்று சொல்லப்படடிருக்கிறது. வராடன், மேதன், சண்டாளன் தாசன், சுவபசன், கோலிகன், இவர்களும் மற்றும் பசுக்களைத் தின்பவர்களும் அந்த்யஜர்களெனப்படுகிறுர்கள். இவர்களுடன் வ்யவகரித்தால் ஸ்நானம் செய்யவேண்டும். இவர்களைப்பார்த்தால் உடனே சூரியனை தரிசிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (16) (லகுஆச்வலாயனஸ்மிருதியில், "உதக்யாம் ஸூதிகாம் சைவ பதிதம் சவமந்த்யஜம்| ச்வகாகராஸபான் ஸ்ப்ருஷ்ட்வா ஸவாஸா ஜலமாவிசேத்" பஹிஷ்டை, பிரஸவித்தவள், பதிதன், சவம், சண்டாளன், நாய், காக்கை, கழுதை இவைகளைத் தொட்டால் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 17 (வ்யாக்ரபாதர்) அறிவிப்பதாவது:- "சண்டாளம் பதிதம்சைவ தூரத: பரிவர்ஜயேத்| கோவாலவ்ய ஜனுதர்வாக் ஸ வாஸா ஜலமாவிசேத்"! சண்டாளன் பதிதன் இவர்களை தூரத்தில் விலக்கவேண்டும். அவர்கள் ஓர் பசுவின் வால் வீசும் தூரத்திற்கு குறைவாக இருந்தால் உடுத்த வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். (18), (யமஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்பதாவது, சண்டாளைர் சுவபசை: ர்ப்ருஷ்ட: விண்மூத்ரே ச கிருதோத்விஜ:| த்ரிராத்ரம் து ப்ரகுர்வீத புக்தோச்சிஷ்ட: ஷடாசரேத்||" சண்டாளன் ச்வபசன் இவர்களின் ஸ்பரிசம் ஏற்பட்ட பிறகு ஜலமலோத்ஸர்ஜனம்கூட செய்யலாகாது. அப்படிச் செய்துவிட்டால் மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். உச்சிஷ்டத்தைப் போஜனம் செய்தால் ஆறு நாள் உபவாசமிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது உடனே ஸ்நானம் செய்யவேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம். ஏனெனில் அவர் சொல்வதாவது:-

(தொடரும்,)



# ப்ரமாண சந்திரிகை,

(முன் தொடர்ச்சி.)

---

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் எம். ராமராவ் எழுதுவதாவது:—

இவ்வித ப்ரமாணம் (1) கேவல ப்ரமாணம் (2) அநுப்ரமாணம் என்று இருவகைப்படும். 7. கேவலப்ரமாணம் என்பது யதார்த்தமான ஞானம். இது ஈசுவர ஞானம், லக்ஷ்மீ ஞானம், யோகி ஞானம். அயோகி ஞானம், என்கு வகைப்படும். (1) ஈசுவர ஞானம் இது ஸ்வதந்திரமான ஞானமாகும். மேலும் தன்னைப்பற்றியும் பிறர்களைப்பற்றியுமான எல்லா விஷயங்களையும் கிரஹிக்கவல்லது. இது எப்பொழுதும் உண்மையாகவும் ஈசுவரனின் ஸ்வரூபமாகவும், அநாதியாகவும், நித்யமாகவும் இருப்பது.

(2) லக்ஷ்மீ ஞானம் :- ஈசுவரன் ஒருவனுக்கு மாத்திரம் அதீனமாயுள்ளது. ஈசுவரன் விஷயத்தில்மாத்திரம் முழுமையாகக் கிரஹிக்காததாயும் மற்றவர்கள் விஷயத்தில் ஆலோசனையில்லாமலேயே ஸகலத்தையும் கிரஹிக்க வல்லதாயுமிருக்கிறது. இதுவும் எப்போழுதும் உண்மையானது. இது லக்ஷ்மீயின் ஸ்வரூபமாயும், அநாதியாயும் நித்யமாயும் இருப்பது.

(3) யோகிஞானம்:- இது யோக மகிமையினுல் பெற்ற சிறப்பையுடையது. இது ருஜு யோகி ஞானம், தாத்விக யோகி ஞானம் என்று மூன்று விதப்படும். ப்ரம்மபதவிக்கு அர்கதையுள்ள ஜீவர்கள் ருஜுக்கள் எனப்படுவார்கள். ஈசுவரனைத்தவிர மற்ற விஷயங்களில் ஆலோசித்தால்தான் எல்லாவற்றையும் கிரஹிக்க வல்ல ஞானம், ருஜு யோகி ஞானம் எனப்படும். இது ஸ்வரூப ஞானம் என்றும் மனோவிருத்தி ஞானம் என்றும் இரண்டுவிதமானது. ஸ்வரூப ஞானம் அநாதி நித்யமானது. விருத்தி ஞானமோ பாம்பரையாய் அநாதியானது. இவ்விரண்டும் எப்போதும் யதார்த்தமானது.

தத்வாபிமானி தேவதைகளுக்கு தாத்விகர்கள் எனப்பெயர். ஆகையால் அவர்களின் ஞானம் தாத்விக யோகி ஞானம் எனப்படும். இது அநாதியாயும், பகவானைத்தவிர மற்றவர்களின் விஷயத்தில் ஆலோசனை செய்தபோதிலும்கூட முழுமையுமறியக்கூடாததாயுமுள்ளது. இதுவும் ஸ்வரூப ஞானம் என்றும் பாஹ்ய ஞானம் என்றும், இரண்டு வகைப்படும். முதலிற் சொல்லப்பட்டது உண்மையானதே. பாஹ்ய ஞானம் சிற்சில சமயங்களில் உள்ளதை உள்ளபடி கிரஹிக்காது. ருஜுக்கள், தத்வாபிமானி தேவதைகள் இவர்களைத்தவிர ஏனைய தேவர்களும், ரிஷிகளும்தான் அதாத்விகர்கள் ஆவார்கள். இவர்களின் ஞானம்தான் அதாத்விக யோகி ஞானம். இது ஆதியையுடையதாயும், பகவானைத்தவிர மற்றவர்கள் விஷயத்தில் அல்ப அக்ஞானத்தோடு கூடியதாயிருக்கிறது. இதுவும் ஸ்வரூப ஞானம், பாஹ்ய ஞானம் என்று இருவகையாயுள்ளது. ஸ்வரூப ஞானம் உள்ளதை உள்ளபடியே கிரஹிக்கும். பாஹ்ய ஞானம் சிற்சில சமயங்களில் தவறாகவும் கிரஹிக்கும். (4) யோகிகளைத்தவிர மற்ற ஜீவர்கள் அனைவருமே அயோகிகள் எனப்படுவார்கள். இவர்களின் ஞானம்தான் அயோகி ஞானம் எனப்படும்: இது பகவானைத்தவிர மற்ற விஷயங்களில் அக்ஞானம் குடிகொண்டுள்ளது. இதுவும் மேலே கூறப்பட்டபடி இருவகையானது. ஆனால் இதில் ஸ்வரூப ஞானத்துக்கு அபிவ்யக்தி (வெளியில் படையாகத் தோன்றுதல்) ரூபமான உற்பத்தியும் விநாசமும் உண்டு. பாஹ்ய ஞானம் புதிதாகவே உண்டாகி நஷ்டமாகிவிடும். அந்த அயோகிகள் (1) முக்தி யோக்யர்கள் (2) நித்ய ஸம்ஸாரிகள் (3) தமோ யோக்யர்கள் என மூவகையினராவார்கள். முக்தி யோக்யர்களின் ஸ்வரூபஞானம் உள்ளதை உள்ளபடியே கிரஹிக்கும். நித்ய ஸம்ஸாரிகளின் ஸ்வரூப ஞானம். அம்மாதிரியில்லாமல் சில காலங்களில் உள்ளபடியே கிரஹிக்கும், சில காலங்களில் மாறாக கிரஹிக்கும். தமோ யோக்யர்களில் ஞானம் என்றைக்கும் இருப்பதற்கு மாறாகவே கிரஹிக்கும். மூவர்களின் பாஹ்ய ஞானமும் சில சமயங்களில் உண்மையாகவும், சில சமயங்களில் தவறாகவும் கிரஹிக்கும்.

(தொடரும்.)

268700